OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
**S. M.
FERNANDO**
580, HOSPITAL ROAD
(Near Bank of Ceylon)
JAFFNA.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கண் வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்யும் கண்ணாடிகளை சரியாக வழங்குபவர்கள்
எஸ், எம், பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி, (இலங்கை வங்கிக்கு அருகில்) யாழ்ப்பாணம்.

சுடர்10 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 07 ஞாயிற்றுக்கிழமை (21 - 05 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 175

# எமது இனத்தின் பண்பாட்டுக்கு அமைய சட்டமுறைகள் உருவாக்கப்பட வேண்டும்

## தமிழீழ நீதியாளர் உறுதிப்பிரமாண வைபவத்தில் தலைவர் பிரபா உரை

யாழ்ப்பாணம், மே 21

"எமது தேசிய இனத்தின் பண்பாட்டிற்கு அமையவும், மாறி வரும் உலகின் நவீன அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்றதாகவும் எமது சட்ட முறை உருவாக்கப்பட வேண்டும். எமது தேசத்தை அடிமைப் படுத்திய அந்நியர்கள் எமது மக்களின் வாழ்க்கை முறையில் மாற்றத்தைக் கொண்டுவர முயன்றார்கள். தமது சட்டங்களையும் திணித்தார்கள். அன்று அடிமைப்பட்ட மக்களாக நாம் வாழ்ந்ததால், பலத்தின் மூலமாக அந்நியர்கள் எம் மீது திணித்த சட்டங்களை நாம் ஏற்றுக்கொள்ள நேர்ந்தது. ஆனால் இன்று நிலைமை வேறு. இப்பொழுது நாம் எமது சொந்தப் பலத்தின் மூலமாக எமது மண்ணை மீட்டு வருகிறோம். எமது தேசத்தில் ஒரு சட்ட நிர்வாக ஒழுங்கை கட்டியமைத்து வருகிறோம். இந்த சட்ட ஒழுங்கும் நீதி நிர்வாகமும் எமது மக்களின் தேசியக் கட்டமைப்பை பலப்படுத்துவதாக அமைய வேண்டும். எமது இனத்தின் பண்பாட்டு வாழ்வை மேம்படுத்த வேண்டும்."

இவ்வாறு தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் நேற்றைய தினம் தமிழீழ நீதியாளர்களின் உறுதிப் பிரமாண வைபவத்தில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

மேல் நீதிமன்ற நீதியாளர்களாக, திரு. அன்பு, திரு. சுகிகரன், திரு. பூவேந்தன் ஆகியோரும், மாவட்ட நீதியாளர்களாக திரு. செந்தூர், திரு. சிராளன், திரு. மனோகரன், செல்வி அல்லிராணி, செல்வி கண்மணி ஆகியோரும், சட்டவாளர்களாக திரு. இசையரசன், செல்வி அறிவுமதி ஆகியோரும் தேசியத் தலைவர் முன்னிலையில் உறுதிப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர்.

தலைவர் பிரபாகரன் அவர்கள் இவ்வைபவத்தில் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"தமிழீழ நீதி நிர்வாகத் துறை திறம்படச் செயற்படுவதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன். யாழ்ப்பாணம் வந்த வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் மட்டுமன்றி, சிங்களப் பத்திரிகையாளர்கள் கூட எமது நீதி நிர்வாக முறையை புகழ்ந்துரைத்திருக்கிறார்கள்.

நேர்மையும், கண்ணியமும், ஒழுக்கமும் நிறைந்த எமது போராளிகள் சட்டவாளர்களாகவும், நீதியாளர்களாகவும் கடமைபுரிவதால் நீதித்துறை ஊழல் அற்றமுறையில் செம்மையாகச் செயற்படு

( 6 ஆம் பக்கம் பார்க்க)



தமிழீழ நீதியாளர்களின் உறுதிப்பிரமாண வைபவத்தில் நீதியாளர் திரு. ச. பூவேந்தன் தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே பிரபாகரன் முன்னிலையில் மேல்முறையீட்டு நீதியாளராக உறுதிப் பிரமாணம் எடுத்துக் கொள்கிறார். அருகில் தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பரா காணப்படுகிறார் (ஐ)

### ஷெல் தாக்குதல்

வல்வெட்டித்துறை, மே 21

வளலாய்ப் பகுதியில் தங்கியுள்ள ஸ்ரீலங்கா ராணுவத்தினர் தொண்டமானாறு பகுதியை நோக்கி நேற்றும் ஷெல் தாக்குதலை நடத்தினர்.

செல்வச்சந்நிதி ஆலயம் மற்றும் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

(இ 155)

### இறந்தோர் எண்ணிக்கை 8 ஆக உயர்வு

கொழும்பு, மே 21

ஆனையிறவு தட்டுவன் கொட்டி இராணுவக் காவலரண் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட படையினர் எண்ணிக்கை 8 ஆக அதிகரித்துள்ளது.

காயம் அடைந்தோர் எண்ணிக்கையும் 15 என்று அறிவிக்கப்பட்டுள்ளது (இ-7)

### கூட்டணியினர் ஜனாதிபதியை சந்திப்பர்

கொழும்பு, மே. 21

இம்மாதம் 17 ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைச் சந்தித்த தமிழ் கட்சிகளில் இடம்பெறாத தமிழர் விடுதலைக்கூட்டணி கட்சியினர் எதிர்வரும் 30ஆம் திகதி ஜனாதிபதியைச் சந்திக்கவுள்ளார்கள். (இ-4)

## இலங்கைக்கு இந்தியப் படையை அனுப்புவதை நாம் எதிர்க்கிறோம்

### வை. கோபாலசாமி தெரிவிப்பு

சென்னை, மே 21

இலங்கையில் பேரினவாத அரசுக்கும் தமிழ் மக்களுக்கும் நடைபெறும் போராட்டத்தில் இலங்கை அரசுக்கு ஆதரவாக இந்திய இராணுவத்தை அனுப்பக்கூடாது. இதுவே எமது கட்சியின் நிலைப்பாடாகும்.

— மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் திரு வை. கோபாலசாமி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இன்றைய சூழ்நிலையில் தமிழ்ப் பகுதிகளில் முகாம் அமைத்து தமிழர்களைத் தாக்கி வரும் இலங்கை இராணுவத்துக்கு உதவி செய்ய இந்திய இராணுவத்தை அனுப்ப வேண்டும் என்று ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி கேட்டு இருப்பதற்கு கண்டனம் தெரிவித்துக் கொள்கிறேன்.

போபர்ஸ் பீரங்கி பேர ஊழல் வெளியான போது அதிலிருந்து மக்களை திசை திருப்புவதற்காக அன்று இந்திய - இலங்கை ஒப்பந்தம் செய்யப்பட்டது.

இலங்கை தமிழ்ப் பகுதியில் தமிழர்கள் மீது இலங்கை விமானங்கள் குண்டு வீசி வருகின்றன. குண்டு வீச்சை உடனே நிறுத்த வேண்டும்.

— இவ்வாறு கோபாலசாமி மேலும் தெரிவித்தார். (ஐ)

## மத்தியஸ்தம் செய்ய ஆஸ்திரேலியா முயற்சி

### அமைச்சர் ஒருவர் நாளை வருகிறார்

கொழும்பு, மே 21

ஆஸ்திரேலியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் கேரத் இவான் நாளை திங்கட்கிழமை இலங்கைக்கு உத்தியோக பூர்வப் பயணம் மேற்கொள்கிறார்.

கம்போடியாவில் அமைதியை உருவாக்கும் முயற்சியில் நடுநிலை வகித்தது போன்று இலங்கை இனப்பிரச்சினையிலும் தாம் செயலாற்ற முடியும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அமைதியை எதிர் நோக்கி ஆஸ்திரேலியா நெடுநாளாகக் காத்திருப்பதாகவும் அவர் கூறினார். (இ 4)

### ஆற்றல் மிக்க படையினர் அங்கு உள்ளனர்

# பூநகரி முகாமைத் தாக்கினால் புலிகள் அதிக இழப்பை சந்திப்பர்

### தளபதி பிரிகேடியர் விஜயசேகர எச்சரிக்கை

கொழும்பு, மே 21

சிறந்த ஆற்றல் மிக்க துருப்பினர் பூநகரியில் உள்ளனர். பூநகரி முகாம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினால் கடந்த தடவையை விட அவர்கள் பலத்த இழப்பைச் சந்திக்கவேண்டி வரும்.

— பூநகரி படை முகாமின் தளபதி பிரிகேடியர் சிசிர விஜயசேகர இவ்வாறு எச்சரித்துள்ளார்.

"லங்கா புவத்" செய்தி நிறுவனத்துக்கு அளித்த விசேட பேட்டி ஒன்றிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

கடந்த தடவை பூநகரி முகாமை தாக்கிய போது விடுதலைப் புலிகள் இருநூறு பேரை இழந்தனர்.

பூநகரி முகாம் படையினருக்கு தற்போது எந்தவிதமான பிரச்சினையும் இல்லை.

போதியளவு ஆயுதங்கள், உணவு எல்லாமே அவர்களிடம் உள்ளன. சென்ற தடவையை விட கூடிய பலத்துடன் அங்கு படையினர் உள்ளனர்.

இந்த ஆண்டு பூநகரி முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல்களில் அவர்கள் 250 பேரை இழந்துள்ளனர்.

கூலிக்கு அமர்த்தப்பட்ட மேற்கு நாட்டு பத்திரிகை நிருபர்கள் மூலம் வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள் பூநகரி முகாமின் நிலவரம் குறித்து மிகையான தகவல்களைப் பரப்பி வருகின்றன.

இவ்வாறு பிரிகேடியர் சிசிர விஜயசேகர மேலும் தெரிவித்தார். (ஐ-4-7)

## எல்லைப்புற கிராமங்களில் இளைஞருக்கு ஆயுத பயிற்சி

கொழும்பு, மே. 21

மதவாச்சி பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட எல்லைப்புறக் கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட இளைஞர்களுக்கு ஆயுதப்பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இளைஞர்களுக்கு ஒரு நாள் துப்பாக்கி பயிற்சி அளிக்கப்பட இருப்பதாக "லங்காதீப" பத்திரிகை தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகக் கூடிய கிராமங்களைச்சேர்ந்த இளைஞர்களுக்கு துப்பாக்கிகளையும் ரவைகளையும் பொலீஸார் வழங்க உள்ளனர் என்றும் —

அந்த இளைஞர்கள் தமது கிராமங்களைப் பாதுகாக்க தாமாகவே முன்வந்துள்ளனர் என்றும் ஊர்காவல்படையினருடன் இணைந்து அவர்கள் கிராமங்களைப் பாதுகாப்பர் என்றும் "லங்காதீப" செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

### புலிகள் தாக்குதல் நடத்துவர் என்ற ரகசியத் தகவலை அடுத்து

# கொழும்பு துறைமுகத்தில் கப்பல்களை சுற்றி சுழியோடி தேடுதல் நடத்தும் கடற்படை!

### ஏற்றுமதிப் பொருள்கள் உள்ளே எடுத்து வரவும் தடை

கொழும்பு, மே. 21

கொழும்புத் துறைமுகத்தை விடுதலைப் புலிகள் தாக்கப் போகிறார்கள் என்று கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து, கடந்த வியாழக்கிழமை முதல் கொழும்பு நகரில் பாதுகாப்பு படையினர் அதிஉஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு துறை முகத்தில் தரித்து நிற்கும் [illegible] வெடிமருந்துகள் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் [illegible] படை சுழியோடிகள் கப்பல்களை சுற்றிச் சுற்றி வந்து சோதனைகளை மேற்கொள்ளுகின்றனர்.

இதற்கிடையில் துறைமுகத்தில் குண்டு வெடிப்பு நிகழப் போவதாக தகவல் கிடைத்ததை அடுத்து, ஏற்றுமதிக்கான சரக்குகள் எதனையும் ஏற்றுக் கொள்ள வேண்டாம் என்று துறைமுக அதிகார சபையை, அரசாங்கம் பணித்[illegible] மதி மீதான தடை விதிக்கப்பட்டதனால், [illegible] வீழ்ச்சி கண்டு வரும் நாட்டின் பொருளாதாரத்தை மேலும் பாதிப்புறச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

துறைமுகத்தில் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள 6க்கும் அதிகமான கண்காணிப்பு பகுதிகளில் முழுமையான ஆயுதம் தரித்த கடற்படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஏற்றுமதி தொழி[illegible]பட்டுள்ள கப்பல சொந்தக்காரர்கள், துறைமுக அதிகாரிகள் மற்றும் அரச ஸ்தாபனங்கள் என்பன இணைந்து, நாட்டின் அவசர கால நிலைமைகள் தொடர்பாக தற்போது ஆராய்ந்து வருகின்றன.

அவர்கள், சரக்குகள் துறை

[ 6 ஆம் பக்கம் பார்க்க]

## மஹரகம குண்டு வெடிப்பு 3 தமிழருக்கு தண்டனை

1992 ஏப்ரல் 8 ஆம் திகதி மஹரகமவில் இடம்பெற்ற குண்டு வெடிப்பின் போது 10 பேர் இறந்தனர்; ஐவர் காயமுற்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக கொழும்பு உயர் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கில் முதலாம் எதிரியான சுந்தரம் பிள்ளை சிவகுமாரன் தன் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகளை ஒப்புக்கொண்டார்.

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயத்தில் புத்தம்புதிய அணுகுமுறைகளை கைக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்

## பீடைக் கொல்லிகளை மட்டுமே விவசாயிகள் நம்பியிருக்கக் கூடாது

*மருதனார்மடம் யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனத்தில் நடைபெற்ற ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாட்டு முகாமைத்துவம் நூல் வெளியீட்டின் போது திரட்டப்பட்ட தகவல்களை இங்கு தொகுத்துத்தருகின்றோம்.*

எமது பிரதேசம் ஒரு விவசாயப் பிரதேசம். பரம்பரை பரம்பரையாக விவசாயச் செய்கையில் எம்மவர்கள் ஈடுபட்டு வந்துள்ளனர்.

காலத்துக்கேற்ப, சூழ்நிலைகளுக்கேற்ப தமது அறிவு — ஆற்றல்களை வளர்த்து நவீன யுக்திகளை கையாண்டு விவசாயத்தின் முன்னேற்றம் கண்டவர்கள்.

விவசாயத்தில் கிருமிநாசனிகளின் பாவனை அதிகரிப்பும், அதன் தாக்கங்களும் உலகின் பல நாடுகளிலும் செறிந்து அதில் இருந்து விடுபடுவதற்கான வழிமுறைகளைப் பற்றி சிந்தித்து வரும் இன்றைய காலத்தில் —

எமது பிரதேசத்திலும் அதன் தாக்கம் ஓரளவு இருப்பினும் போர்க்கால சூழ்நிலைகள் காரணமாக அதிக அளவு தாக்கத்துக்கு உள்ளாகாமல் இருப்பது கண்கூடு. இருப்பினும் விவசாயத்துறையில் ஓரளவு செறிந்து பட்டுவிட்ட கிருமிநாசனிப் பிரயோகத்தை கட்டுப்படுத்துவது பெரும் நன்மை தரும்.

கிருமிநாசனி அறிமுகப்படுத்தப்பட்ட காலத்திலே யாழ்ப்பாணத்து விவசாயிகள் அவற்றைப் பாவிக்க பயப்பட்டனர்; பின் நின்றனர். சில விவசாயிகள் மட்டும் இரவு வேளைகளில் மறைமுகமாக அவற்றை பாவிக்க முற்பட்டனர்.

ஆனால், இன்று — யாழ்ப்பாணத்தில் கிருமிநாசனிகளோ, சேதன அசேதன பசளைகளோ இன்றி விவசாயம் செய்யமுடியாது என்ற நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்.

இதனால் ஏற்படும் பாரிய விளைவுகளில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள, ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாட்டு முகாமைத்துவம் Intergrated Pest Control Managment) அவசியமாகின்றது.

**ஆதிகால விவசாயமும் கிருமிநாசனி அறிமுகமும்**

ஆதிகால மரபுமுறைப் பயிர்ச் செய்கை முறைகள், பீடைக்கட்டுப்பாட்டு முறைகள் போன்றன இன்று விவசாயிகளால் கைவிடப்பட்டுவிட்டன.

1940 ஆம் ஆண்டுக்கு முன் கிருமிநாசனிகள் அறிமுகப்படுத்தப்படவில்லை. நீர் இறைக்கும் இயந்திரங்கள் கூடஇல்லை. துலா, இரட்டை வாளிச் சூத்திரம், பல வாளிச் சூத்திரம் போன்ற முறைகளை பயன்படுத்தினர்.

அன்றைய தேவைக்கேற்ப உற்பத்தியின் அளவும் போதுமானதாக இருந்தது.

சனத்தொகை பெருக உற்பத்திகளும் அதிகரித்தன. கூடிய நிலப்பரப்பில் அல்லது விளைவிக்கப்படும் நிலப்பரப்பில் உற்பத்தியினை அதிகரிக்கச் செய்யவேண்டி இருந்தது.

இதனால் விவசாயத்தில் பல நவீனயுக்திகள் அறிமுகம் செய்யப்பட்டன.

பல்வேறு இரசாயனப் பாவனைகள், களைகொல்லிப் பொருள்கள், உரவகைகள், கிருமிநாசனிகள் ஆகியவற்றின் உபயோகங்கள் பிரயோகிக்கப்பட்டன.

பயிர்ப்பீடைகளைக் கட்டுப்படுத்தவென மலத்தியோன், டி. டி. ரி. போன்ற இரசாயனக் கலவைகள் பாவிக்கப்பட்டன. இக்கலவைகளின் பாவனையால் ஆரம்பகாலங்களில் பீடைத்தாக்கம் குறைந்து வெற்றிகண்ட போதிலும்— காலக்கிரமத்தில் அவற்றின் பிரயோகம் விரும்பத்தகாத பல விளைவுகளை கொண்டு வந்தது.

ஆரம்பகாலத்தில் மரபுமுறை எருஇடல், குறிப்பிட்ட காலத்துக்கு நிலத்தை தரிசாகவிடல், வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு பயிர்செய்தல், மரபுமுறை பீடைக்கட்டுப்பாடு, எதிர்ப்புத் தன்மையான பயிரினங்களைப் பயிரிடல் போன்ற செயற்பாடுகளால் பீடைகள் மிக அரிதாகவே காணப்பட்டன.

ஆனால் இன்றோ—

நவீன] தொழில்நுட்ப விவசாயத்தின் மூலம் கூடிய விளைவை பெறக்கூடிய நிலையில் நவீனவிவசாய தொழில் நுட்பங்களைப்பாவித்து கூடிய விளைவை விவசாயிகள் பெறுகிறார்கள்.

விளைவுகூடிய இனங்களைப் பாவித்தல், உரப்பசளைப் பிரயோகம், பீடைநாசனிப் பிரயோகம் போன்றன நவீன விவசாயத்தில் முக்கியத்துவம் பெற்றபோது பீடைகள் விரைவாக கட்டுப்படுவதுடன் உடனடிப்பலனும் கிடைத்தமையால் பீடைநாசனியைப் பாவிப்பதில் விவசாயிகள் கூடிய ஈடுபாடு கொண்டனர். பீடைநாசனிகளின் பாவனையும் இதனால் அதிகரித்தது. புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள், காடுகள் அழித்தல் போன்ற நிகழ்வுகளாலும், சூழல் மாற்றங்களாலும் பூச்சிப் பீடைகளின் பெருக்கம் அதிகரித்தது.

**யாழ்ப்பாணத்தில் கிருமிநாசனிகள், சேதன, அசேதன பசளைகள் இன்றி விவசாயம் செய்ய முடியாத நிலை.**

**பூச்சிநாசனிப் பிரயோகம்**

பீடைகளைக் கட்டுப்படுத்த பூச்சிநாசனி பிரயோகம் அவசியமாகப்பட்டது.

பூச்சிநாசனிகளை பாவிக்காதபோது 30முதல் 40 வீதமான விளைச்சலை பெற்ற விவசாயிகள் அதனைப் பாவித்தபோது 70வீதமான விளைவு அதிகரிப்பையும் பெற்றது அவதானிக்கப்பட்டது.

உலகம் முழுவதும் பூச்சிப் பீடைகளின் தாக்கத்தால் வருடம்தோறும் 1,400 கோடி மக்களின் உணவு இழக்கப்படுவதாகவும் பொருளியலாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

**பீடை நாசனியின் தவறான பாவனை**

பீடை நாசனிகளைப் பற்றியும் அவற்றின் பிரயோகம் அளவு பற்றியும் விவசாயப் பகுதியினர் போதிய விளக்கங்களை கொடுத்து வந்தனர்.

இருந்தபோதிலும், பல விவசாயிகள், விவசாயத் திணைக்களம் மற்றும் பயிர்ச்செய்கை நிறுவன உத்தியோகத்தர்களால் செய்யப்பட்ட சிபார்சிலும் பார்க்கக் கூடிய அளவு கிருமிநாசனிகளையும் உரவகைகளையும் பாவிக்க முற்பட்டனர்.

விவசாய திணைக்கள ஆராய்ச்சிப் பிரிவின் சிபார்சுகள் ஆலோசனைகளை பெறாமல் விவசாயிகள் தம் இஷ்டப்படி பீடைநாசனிகளை வர்த்தகர்களிடம் பெற்று பயன்படுத்தினர். இதனால் விவசாயத்துறையில் பல நஷ்டங்களும், சமுதாயத்துக்குப் பல தீமைகளும் விளையத் தொடங்கின.

பீடைகளைக் கட்டுப்படுத்தவென/ பாவிக்கப்படும் கிருமிநாசனியின் பயன்பாடு விவசாயிகளுக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை.

பதிலாக கிருமிநாசனிகளிற் கலந்துள்ள நச்சுத்தன்மை, மரக்கறிகளில் செறிந்து மனித உடலில் சிறிது சிறிதாக நஞ்சை ஊட்டியது. அத்துடன் பல்வேறு வகையான நோய்களைத் தோற்றுவிக்கவும் செய்தது.

**தவறான பூச்சி நாசனிப் பிரயோகத்தால் விவசாயத் துறைக்கு பெருநஷ்டம்; சமுதாயத்துக்கு பல தீமைகள்.**

கிருமிநாசனிகளை பயன்படுத்தி நல்ல விளைவை பெற்று விவசாயிகள் இலாபம் பெறும் வேளையில், பாவனையாளர்கள் நஞ்சூட்டப்படும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

**பீடைநாசனி கட்டுப்பாட்டின் நன்மைகள்**

அளவுக்கதிக பீடை நாசனிகளை விவசாயிகள் பாவிப்பதால் அவற்றுக்கு அதிக பணம் செலவிடவேண்டி உள்ளது அவற்றை கட்டுப்படுத்துவதனால் அவற்றுக்காகும் செலவைக் குறைப்பதுடன் அப்பணத்தை வேறு பல தேவைகளுக்கும் பயன்படுத்தலாம்.

**கிருமிநாசனியை பயன்படுத்தும் விவசாயிகளுக்கு நல்ல இலாபம், ஆனால் பாவனையாளர் நஞ்சூட்டப்படுகின்றனர்.**

அதன் மூலம் விவசாயிகள் அதிக விளைவைபெற்று இலாபம் அடையாலாம்.

எம்மை அறியாமலேயே எமது உடலில் செறியும் நஞ்சுதன்மையில் இருந்தும், பல்வேறு நோய்களில் இருந்தும் விடுபடலாம் சூழல் மாசடைவதைக் கூட தடுக்கலாம்

**எவ்வாறு கட்டுப்படுத்தலாம்?**

இன்றைய காலகட்டத்தில் புதிய அணுகுமுறைகள் விவசாயத்தில் கைக்கொள்ளப் பட வேண்டும்.

பாவிக்கப்படும் பீடை நாசனிகள் மலிவானவையாகவும், விவசாயிகளுக்கு நன்மைதரக் கூடியனவாகவும் இருக்க வேண்டும்.

அத்துடன் அவை வினைத்திறனுடன் கட்டுப்படுத்தக் கூடியதாகவும், மனித ஆரோக்கியத்தைப் பாதுகாக்கக் கூடியதாகவும், சூழல் குழம்பாதிருக்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

இதற்கு ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாட்டு முகாமைத்துவம் பின்பற்றப்பட வேண்டும்.

பல பொருத்தமான தொழில் நுட்ப முறைகளை ஒன்றுடன் ஒன்று முரண்படாத வகையில் பயன்படுத்தப்பட வேண்டும்.

குறிக்கப்பட்ட பீடையைக் கட்டுப்படுத்த பொருத்தமான முறையைத் தேர்ந்தெடுத்து பயன்படுத்த வேண்டும்.

பீடைகளைக் கட்டுப்படுத்த பீடைக் கொல்லிகளை மட்டும் நம்பியிருக்கக் கூடாது.

பண்பாட்டு முறை, பொறிமுறை, உயிரியல் முறை, எதிர்ப்புச் சக்தியுள்ள புதிய பயிர் வர்க்கம் உருவாக்கல் போன்றவற்றை ஒரு திட்டமிட்ட ஒழுங்கில் ஒருங்கிணைத்து பயிர்ப்பாதுகாப்பை மேற்கொள்ள வேண்டும்.

மலிவானதும் லாபம் தரக்கூடியதும் பீடைகளை வினைத்திறனாகக் கட்டுப்படுத்தக் கூடியதாகவும் சூழலுக்கும் எமக்கும் பாதுகாப்புத் தரக்கூடியதுமான இயற்கையோடு ஒத்ததாக பீடைநாசனி பிரயோகம் அமையவேண்டும்.

ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாட்டு முகாமைத்துவம் மூலம் நாம் இதனைக் கைக் கொள்ள முடியும். ★

**தொகுப்பு: விஸ்வபரி**

---


# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**97 வர்த்தகப் பிரிவு**

✶ பொருளியல் ✶
திரு. லோகசிங்கம் 10-00 – 11-00

✶ வர்த்தகம் ✶
திரு. வரதன் 11 - 00 – 12 - 00

✶ கணக்கியல் ✶
திரு. கலைச்செல்வன் 8-00 – 9-00

✶ அளவையியல் ✶
திரு. விக்கி 9-00 – 10-00

★ அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
★ 95 A/L வகுப்புகளுக்கு பாடத்திட்டங்கள் முடித்து மீட்டல் செய்யப்படுகின்றன.

(சி-1408)


## 9-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 10 — 04 — 1964

உதிர்வு: 21 — 05 — 1986

செல்வன்
**குமாரசுவாமி சர்வானந்தன்**
(பழைய மாணவ தலைவன் சாவகச்சேரி டிறிபேர்க்கல்லூரி)

தோற்றம் மறைவால் அழியலாம் – ஆனால் நினைவால் மறைவை வெல்லலாம் – எனவே நினைவால் உம்மைக் காண்போம் என்றும்

உங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்

அப்பா, அம்மா, சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள்.

இல: 25 முதலாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(36670)


## சென்.பீற்றர்ஸ் மெதடிஸ்த திருச்சபை

★ விற்பனை ★
(SALE)

✶ 22 - 05 - 95 நாளை
★ இடம்: ரிம்மர் மண்டபம், யாழ்ப்பாணம்.
✶ ஆரம்பம்: முற்பகல் 10 மணிக்கு.
டாக்டர் து. வி. ஜெயகுலராஜாவும் திருமதி ஜெயகுலராஜாவும் விற்பனையை வைபவரீதியாக ஆரம்பித்து வைப்பர்.
✶ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-1247) முகாமைக் குரு



இன்றும் நாளையும்

## நேற்று

மூத்த ஓவியர்களின்
**ஓவியக் காட்சி**

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் ஆதரவில்
யா. ப. க. பொருளியல் மண்டபத்தில்
நாளை (22-05-95) மாலை 3.00 மணிக்கு
கலந்துரையாடல்

**"யாழ்ப்பாண ஓவியப் பாரம்பரியம்"**

அன்பளிப்பு:
எஸ். எம். பெர்னாண்டோ
யாழ்ப்பாணம்

[36749]


## தவறிவிட்டது

நேற்றுக்காலை வாகையடி, மட்டுவில் தெற்கிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் ஒரு பென்ரனுடன் கூடிய சங்கிலி தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கருணை உள்ளத்துடன் தந்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

விலாசம்: அல்லது

திருமதி அ. ஆறுமுகம்
வாகையடிச் சந்தி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

திருமதி பு. ஞானப்பிரகாசம்
37/32 (7/8),
முதலாம் ஒழுங்கை,
[illegible]
யாழ்ப்பாணம்.

[36748]

**புலிகளின் குரல் வானொலியில்**

21 — 05 — 1995
ஞாயிறு இரவு
★ 8-02 — இசையரங்கம்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — தொடர் நாடகம்— கருணைரவி எழுதும் "காணிநிலம்வேண்டும்" அங்கம் 10

22 — 05 — 1995
திங்கள் காலை
★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 - நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
✶ 7-40— நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

**தமிழீழ வானொலியில்**

ஞாயிறு மாலை
✶ 5-01 — சிந்தலைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 புதியவை
★ 5-15 — மழலைகளுக்காக
★ 5-30— கதம்பம்
✶ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
★ 6-02— உங்கள் தெரிவு


**பிரத்தியேக வகுப்பு**
(A/L 96, 97)
English Literature

ஆசிரியர்
திரு
சோ. பத்மநாதன்

ஆரம்பம்:
28 - 05 - 95
காலை 9 - 10 மணி

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(சி/ 1406)



**95 A/L**

வர்த்தகமும் நிதியும்
திரு. தி. வரதன்
B. B. A. (Hons)

பாடத்திட்டம் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதால் துரித மீட்டல் ஆரம்பமாகி விட்டது.

| | | |
|---|---|---|
| விக்னா (யாழ்நகர்) | சனி / ஞாயிறு | — 10 – 11 |
| வாணி (சுன்னாகம்) | சனி / ஞாயிறு | — 4-15 / 6-15 |
| கீன் (திருநெல்வேலி) | சனி / ஞாயிறு | — 1 – 2 |
| சிவாகி (சாவகச்சேரி) | சனி / ஞாயிறு | — 6 – 7 |

(சி-1407)


## 2 ஆம் ஆண்டு நிறைவு

**21 - 05 - 1995**

நடமாடும் மருத்துவ சேவை
விடுதலைப் புலிகள் மருத்துவப் பிரிவு

எம் மக்களின் சுகாதார நிலையை மேம்படுத்தும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட நடமாடும் மருத்துவ சேவை மிகவும் நல்ல முறையில் செயற்பட்டு இன்றுடன் இரண்டு ஆண்டுகளை நிறைவு செய்கின்றது. இக்குறுகிய காலத்தில் நடமாடும் மருத்துவ சேவை தூரப் பிரதேசக் கிராமங்களிலும் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் எம்மக்களுக்கு பல கடினமான சூழ்நிலைகளிற்கு மத்தியிலும் அவர்களது வாழ்விடங்களை நாடிச்சென்று சிறந்த மருத்துவ சுகாதார சேவைகளை நல்கியுள்ளது.

நடமாடும் மருத்துவ சேவை தொடர்ந்தும் சிறப்பாக செயற்பட்டு பல சிறந்த நாட்களை காண வேண்டுமென எம்மக்களுடன் இணைந்து நாமும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**மருந்து பாமஸி வகைகள் (தனியார்) வரையறுள்ளது**

484, கேணல் கிட்டுசாலை யாழ்ப்பாணம்.

(சி/1249)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல இன அல்சேஷன் நாய்க்குட்டிகள், ஊசி ஏற்றப்பட்டு, 30 நாட்கள் நிரம்பியவை விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இல. 15, சினியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம். (36725)

தென்னை, சகல வசதிகளுடனும் கூடிய வீடு வளவு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி க. பத்மநாதன், கேரதீவு றோட், இரிதரன் வீதி [சமிக்கை ஒழுங்கை] நாவற்குழி [36739]

2½ மாதம் நிரம்பிய நல்ல இன அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 15/2, ஓடைலேன் (ராதா லேன்) வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். [36738]

ஊசி ஏற்றப்பட்ட பெரிய இன அல்சேசன் நாய்க்குட்டிகளும், இரண்டு வயது பெண் அல்சேசன் நாயும் விற்பனைக்குண்டு. தொடர்பு: N சரவணபவன் C/o சி. தில்லைநாதன், தான் மாக்காலை கே. கே எஸ் வீதி, மல்லாகம் அல்லது சி. தில்லைநாதன், மிஷன் ஒழுங்கை, மல்லாகம். [8548]

ஒரு மாதம் நிரம்பிய கினிக்கோழிக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. சகல இன பான்சி கோழி முட்டைகளும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு கொள்ளவும்: இல. 28/23, மணத்தறை லேன், கந்தர்மடம். [36728]

### இறைச்சிக்கோழி விற்பனை

பிறொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும் 54/2, சந்தன மாதா கோயில் முன் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி, பாண்டியந்தாழ்வு, யாழ்ப்பாணம். [36745]

### காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை, மூளாய் றோட்டில் மாவடிச் சந்திக்கு அருகில் எட்டு பரப்புக் காணி இரண்டு முகப்புடனும், கிணற்றுடனும் விற்பனைக்குண்டு தொடர்பு: சு. பரமேஸ்வரன் இல 90/4, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். [36709]

### வெளிவந்துவிட்டது

குடபர்ணன் வகைப்படலம் பல்கலைக்கழக வெளிவாரி முதற்கலைத் தேர்வுக்கும் G. A. Q. பாலபண்டித மாணவருக்கும் ஏற்றது. 5ஆம் ஆண்டு ஆரம்ப பொது அறிவு (தொகுப்பு: சி பொன்னம்பலம்) மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். ஸ்ரீகாந்த புத்தகசாலை, நல்லூர். (சி-1374)

### வீனஸ் அன்ரனா

ரூபவாஹினி, மட்றாஸ் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு T.V. அன்ரனா பொருத்துதல், பழுதுபார்த்தல். T.V. டெக், றேடியோ, மணிக்கூடுகளை திருத்திக்கொள்வதற்கு வீனஸ் டிஜிட்டல் வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி [ஆரியகுளம் சந்தி], யாழ்ப்பாணம் கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. [சி-1350]

### மணப்பெண்கள் தேவை

இங்கு வந்து திருமணம் செய்து வெளிநாடு செல்ல விரும்புபவர்கள் அல்லது ஸ்பொன்சர் மூலமாக வெளிநாடு செல்ல விரும்பும் பெண்கள் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். [36740]

இந்து 35 வயது. சொந்தக் கடை, செவ்வாய்க்குற்ற மற்ற 40வயது, அரசாங்க உத்தியோகத்தர், 27. 31 வயது பட்டதாரி. 37 வயது போஸ்ட் பியனுக்குத் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம். [36742]

### ஆங்கிலக் கல்வி

ஆங்கிலம் இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தினரால் தொழில் செய்பவர்களுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும், ஆண்டு 5க்கு மேல் வீட்டுக்கு வந்து கற்பித்துக் கொடுக்கப்படும். கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும்: இல. 793, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [36688]

### வீடு விற்பனைக்கு

வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அண்மையில் கனகரத்தினம் வீதியில் வீட்டுடன் பன்னிரண்டேகால் பரப்புக் காணி, இரு கிணறுகள், இரு குசினிகள், இரு மலசலகூடம், இரு குளியலறைகள் உட்பட பலன் தரும் மரங்களுடன் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: நரேந்திரன், இல. 383/1, நாவலர் ஒழுங்கை, ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம். [36663]

### திருமண சேவை

செவ்வாய்க்குற்றமற்ற 34 வயது ஆசிரியை, 33 வயது கச்சேரி கிளார்க், 35 வயது பெண் டாக்டர் இவர்களுக்கு தனியாகவோ மாற்றாகவோ விரும்புகின்றனர். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (36743)

### மணமக்கள் தேவையா?

எம்மிடம் எல்லா இரகத்திலும் மணமக்கள் இருக்கிறார்கள். சைவ போசன மக்களும், கிறிஸ்தவர்களும் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (36741)

## யோகாசன நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், மே 21

அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனத்தின் இலகுவான ஆசன செய்முறை நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும். (ஒ-14)

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

பின்வரும் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் கோரப்படுகின்றன

★ தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்து
★ ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்து
★ உடையமைத்தல்
★ தையல் இயந்திரம் திருத்தற் பயிற்சி [ஆண், பெண் இருபாலாருக்கும்]
★ நீர் இறைக்கும் இயந்திரம் திருத்தற் பயிற்சி
★ துவிச்சக்கர வண்டி திருத்தற் பயிற்சி (பெண்கள் மட்டும்)

தகைமைகள்:

1. தமிழ்/ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்து பயிற்சி நெறிக்கு ஜி சீ ஈ (சாதாரணம்) பரீட்சையில் தமிழ்/ஆங்கிலத்தில் திறமைச்சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்
2. ஏனைய பயிற்சி நெறிகளுக்கு ஜி சீ ஈ. [சாதாரணம்] வரை படித்திருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி: **05-06-1995**

சுய விவரங்களுடன் விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,
106, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
[சி/1233]

ஸ்ரீ விராட் விஸ்வப் பிரம்மணே நம

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் யுவ வருடம் வைகாசி மாதம் 11ஆம் நாள் (25-05-1995) வியாழக்கிழமை முற்பகல் 7.28 மணி தொடக்கம் 9-04 மணி வரையிலான மிதுனலக்கின சுபவேளையில்,

| எமது புத்திரன் திருநிறை செல்வன் **கணேசரட்ணம்** (ராஜன்) அவர்களுக்கும் | எமது புத்திரி திருநிறை செல்வி **சுபாஜினி** (பாமா) அவர்களுக்கும் |
| --- | --- |

மணமகள் இல்லத்தில் திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம்: மணமகன் இல்லத்தில் (26-05-1995) வெள்ளிக்கிழமை
மணமகள் இல்லத்தில் (27-05-1995) சனிக்கிழமை

★ இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. திருமதி ச. சந்தையா குடும்பத்தினர், சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு
தற்கால வதிவிடம்: அம்மன் வீதி, உடுவில்.

திருமதி ப. சுந்தரம் (தில்லைநாதன்) குடும்பத்தினர், காளிகோவிலடி, சங்கானை.

[3673]

உடுவில் சென் மேரிஸ் கழக ஆதரவில்
சுன்னாகம் றோட்டரக்ட் கழகம் நடத்தும்
இருவர் கொண்ட மென்பந்து கிறிக்கெட்

## இறுதிச் சுற்றுப்போட்டி

காலம்: 21 மே 95
இடம்: யா/இராமநாதன் கல்லூரி மைதானம்
நேரம்: பிற்பகல் 3 மணி

காட்சி ஆட்டம்:
யாழ். றோட்டறிக் கழகம்
எதிர்
சுன்னாகம் றோட்டரக்ட் கழகம்

இறுதி ஆட்டம்:
நொதோன் வி. க.
எதிர்
சென். மேரிஸ் வி. க.

★ இந்நிகழ்வின் இறுதியில் பரிசளிப்பு விழாவும், கழக செயற்திட்டத்தின் கீழ் உருப்பிராய் ஞானசம்பந்தர் இல்லத்திற்கு பெற்றோமக்ஸ் வழங்கும் நிகழ்வும் இடம் பெறும்.

தலைவர்,
சுன்னாகம் றோட்டறக்ட் கழகம்.
[சி-1241]

## மலரும் மலர்கள்

(வீடியோ சேவை)

உங்களின் மங்களகரமான நிகழ்வுகளை நவீன மிக்சர் கமெராமூலம் வீடியோ, புகைப்படம் பிடித்திட நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே இடம்

இல. 82, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்

கிளை:

சக்தி வீடியோ
இருபாலைச் சந்தி, கோப்பாய்.
(36722)

சென். ஜோன்ஸ் கல்லூரி
யாழ்ப்பாணம்.

## ஆண்டுப் பரிசளிப்பு விழா அழைப்பு

காலம்: **27 05-1995**
நேரம்: காலை 9.30 மணி
இடம்: பீற்றோ ஞாபகார்த்த மண்டபம்

பிரதம அதிதிகள்
வைத்திய கலாநிதி
து. வி. ஜெயகுலராஜா
(மருத்துவ அத்தியட்சகர், யாழ்ப்பாணம் தனியார் வைத்தியசாலைகள், ஆனைப்பந்தி)
&
திருமதி கிறிஸ்டினா ஞானதிலகராணி ஜெயகுலராஜா

பெற்றோர், பழைய மாணவர், நண்பர்கள்
★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

அதிபர், ஆசிரியர், மாணவர்.
[சி/1179]

## தாதியர் பயிற்சி நெறி
## DIPLOMA IN NURSING

10-6-95ல் ஆரம்பமாகின்றன

1. தமிழீழத்தின் தனியார் துறை தாதியப்பயிற்சியின் ஆரம்ப கர்த்தாவும், வேலூர் தாதியப் பயிற்சியில் 30 வருட கால அனுபவம் உடையவரும், தாதியர் போதனாசிரியராக 12 வருட கால அனுபவம் உள்ளவருமான கலாநிதி V P சுந்தரராஜன் அவர்களால் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.
2. கல்வித் தகைமை:- க. பொ. த. (சாதாரணம்).
3. விசேட மருந்தியல் பாடம் உட்பட, குழந்தைப் பராமரிப்பு, மருத்துவ உளவியல், குழந்தை உளவியல் ஆகிய பாடங்களும் உள்ளடக்கப்பட்டன.
4. நகரின் பிரபல வைத்தியசாலையில் இரண்டு மாத கால செய்முறைப் பயிற்சிகள்.
5. போராளிகள், மாவீரர் குடும்பத்தவர்களுக்கு இலவச கல்வி.

விபரங்களுக்கு:-

**சாயி மருத்துவக் கல்லூரி**
இல: 10 இல 6 பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-1388)

## பேச்சுவார்த்தைகளை....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பணியைப் புரிய — நல்லவர்கள் அனுப்பப்பட்டனர்.

தீர்மானங்களை எடுத்தல், அவற்றை நடைமுறைப்படுத்துதல் ஆகியன பற்றியும் முக்கியமான படிப்பினைகள் உள்ளன.

ஒரு தீர்மானம் எப்படி எடுக்கப்படுகின்றது, எப்படி நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பவை தீர்மானம் ஏன் எடுக்கப்படுகின்றது என்ற அதே அளவிற்கு முக்கியமானது.

தடையை நீக்கும் தீர்மானம் முழுதாக அமுல்படுத்தப்படாமை பற்றிய புலிகளின் முறையீடு இதற்கு ஓர் உதாரணமாகும்.

ஏப்ரல் 12ஆம் திகதி திரு. பிரபாகரனுக்கு எழுதிய கடிதத்தில் ஜனாதிபதியே இதை ஏற்றுக் கொண்டார்.

நேரடிப் பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட பிரச்சினை என்னவென்றால் அரசாங்கம் அதன் அரசியல் வாதிகளை அனுப்பவில்லை. சிவில் சமுதாயத்தில் உள்ள சமாதானத் தொகுதியினரின் நல்லெண்ணம், நல்லாசி, விசுவாசம் ஆகியவற்றில் நம்பியிருந்தது. இந்த நேரடிப் பேச்சுவார்த்தைகளில் ஜனாதிபதியும் அவருடைய அன்னியோன்ய நண்பர்களுமே கலந்து கொண்டனர்; ஜனாதிபதியும் அவருடைய கட்சிக்காரர்கள் அரசியல் பங்குதாரர்களும் கலந்து கொள்வது என்ற முறையில் அது அமையவில்லை.

இவை அனைத்தையும் ஒட்டி ஜனாதிபதி என்ன நினைக்கின்றார்?

பேச்சுவார்த்தைகள் நடைபெறாத நிலைமையில் சமாதான நடைமுறை மீண்டும் கஷ்டப்பட்டு உருவாக்கப்பட வேண்டும். "சமாதானத்துக்கான யுத்தம்" என்ற தந்திரோபாயம் என்றாலும் கூட மேற்குறிப்பிட்ட அரசியல் தீர்வு வெளிவந்தேயாக வேண்டும். மேலும், பேச்சுவார்த்தைக் கதவு மூடப்படாமல் இருக்க ஒரு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தர் சற்றுப் பயனுடையவராக இருப்பார்.

[■]

### மத்திய....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டோர்

இவ்வாறு புறூண்டியில் தஞ்சமடைந்திருந்த றுவாண்டா ஹூட்டு இனத்தவர்களும் தற்போது புறூண்டியில் உள்ள ருட்சி இனத்தவர்களுக்கு அஞ்சி தன்ஸானியாவுக்கு இடம்பெயர ஆரம்பித்துள்ளனர்.

அகதிகளின் வருகையை தடுத்து நிறுத்துவதற்காக தன்ஸானியா புறூண்டியுடனான எல்லையை மூடி விட்டுள்ளது.

ஆபிரிக்க வரலாற்றில் இரத்தக்கறை படிந்த அத்தியாயம் றுவாண்டாப் படுகொலைகள். தற்போது புறூண்டியும் இதே பாதையை நோக்கிச் செல்கிறது. ★

## போதனாசிரியர் தேவை

* தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்து
* ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்து
* உடையமைத்தல்

ஆகிய பயிற்சி நெறிகளுக்கான போதனாசிரியர்கள் உடன் தேவை.

அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: **05-06-1995**

சுய விவரங்களுடன் விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

**அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,**
106 4ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(சி-1232)

## தவறிவிட்டது

பெறுமதி வாய்ந்த துணிவகைகள் அடங்கிய கறுப்பு நிற 'பாக்' ஒன்று 18-05-95 வியாழக்கிழமை இரவு 1.30 மணியளவில் இளவாலை-எழுதுமட்டுவாளுக்கும் இடையில் பிரதான வீதியில் தவறிவிட்டது. இதனைக் கண்டு எடுப்போர் தயவு செய்து பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும், தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

திருமதி. அருள்ராஜ் மரியபுஸ்பம்
நவாலி தெற்கு,
மானிப்பாய்
[சி-1246]

## ஓராண்டு நினைவலைகள்

மலர்வு: 07 — 09 — 1931



உதிர்வு: 01 — 06 — 1994

திருமதி
**சிவஞானமணி இரத்தினசபாபதி**

திதி: 21 — 05 — 1995

உன்னை உருக்கி ஒளிதந்தாய் — நாம் வாழ்வில் முன்னேற எல்லா வகையும் முயன்றாய்— எம் அன்னாய் அமரத்துவம் அடைந்து விட்டாலும் இந்நாளும் எந்நாளும் இருப்பாய் இதயத்தில்

பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

அம்பலவாணர் பாதை,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.
[36732]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எபோலா"
மற்றொரு உயிர்கொல்லி வைரஸ் நோய்.

"எய்ட்ஸ்" போன்று தடுப்பு மருந்து ஏதும் கண்டு பிடிக்கப்படாத "எபோலா" நோய்க்கு இன்று இலக்காகியிருக்கும் மத்திய ஆபிரிக்க நாடான ஸயர், நான்கு கோடி சனத்தொகையைக் கொண்டது.

# உலகை அச்சுறுத்தும்.....
# .....ஆட்கொல்லி நோய் 'எபோலா'

தலைநகர் கின்ஷாஸாவிலிருந்து ஐநூறு கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் கிக்விற் நகரமே எபோலா வைரஸின் ஆட்கொல்லித் தாக்குதலுக்கு பெரிதும் இலக்காகியிருக்கிறது.

இங்கு இதுவரை சுமார் நூறு பேர் இந்த வைரஸின் தாக்குதலுக்கு பலியாகியிருக்கிறார்கள். மேலும் பல நூற்றுக்கணக்கானோர் பலியாகக் கூடும் என அஞ்சப்படுகின்றது.

பொதுவாக இந்நோய் குரங்குகள், பன்றிகள் போன்ற விலங்குகளைத்தான் தாக்குவது வழமை. எனினும் இடையிடையே மனிதர்களையும் அது விட்டு வைப்பதில்லை.

1976 இல் ஸயர் நாட்டையும் 1979 இல் சூடானையும் இந்த வைரஸ் தாக்கியது. உகண்டாவிலும் 1976 இல் இந்த வைரஸ் தலைகாட்டியதாகக் கூறப்பட்டது.

அப்போது எடுக்கப்பட்ட கடும் சுகாதார பாதுகாப்பு முன்னேற்பாடுகளினால் "எபோலா" வைரஸ் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. ஆனால் நிலைமை இம்முறை மோசமாக இருப்பதாகக் கூறப்படுகின்றது.

### நோயின் அறிகுறி

திடீரென பயங்கரக் காய்ச்சல் ஏற்படுதல், உடல்நோவு, மலத்தோடு இரத்தம் வெளியேறுதல், தோலுக்குக் கீழ் இருந்து இரத்தம் கசிதல் ஆகியன இந்நோயின் அறிகுறிகள். பின்னர் கண்கள், உதடுகள், காதுகள், தோல் துவாரங்கள் ஆகியவற்றில் இரத்தப் பெருக்கு ஏற்பட்டு மரணம் சம்பவிக்கும்.

### தொண்ணூறு வீதமானோர் பிழைக்க வாய்ப்பில்லை

இந்த நோயின் தொற்றுக்கு உள்ளாகுபவர்களில் தொண்ணூறு வீதமானோர் உயிர் பிழைக்க வாய்ப்பில்லை என மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

உலகை அச்சுறுத்தும் "எய்ட்ஸ்" போன்ற இந்த ஆட்கொல்லி நோய்க்கு ஸயரில் உள்ள "எபோலா" நதியின் பெயரே சூட்டப்பட்டுள்ளது. இந்த நதிக்கரையோரத்திலேயே 1976ஆம் ஆண்டளவில் முதன் முதலாக இந்நோய் பரவத் தொடங்கியது கண்டுபிடிக்கப்பட்டது. அதனாலேயே அந்த நதியின் பெயர் இந்த ஆட்கொல்லி நோய்க்கும் சூட்டப்பட்டு விட்டது.

இந்த வைரஸ் கிருமி இரத்தம் மூலம் அல்லது உடல் கழிவுகள், உடல் திரவம் ஆகியவை மூலம் ஒருவரில் இருந்து மற்றவருக்குப் பரவுகிறது.

இதனால் இந்த நோயால் பீடிக்கப்பட்டவருக்கு அல்லது இந்தநோயால் உயிரிழந்தவரின் சடலத்துக்கு அருகே செல்ல எல்லோரும் அஞ்சி ஒடுகின்றனர்.

கிக்விற் நகரில் இந்நோய்க்குப் பயந்து பொதுமக்கள் ஓடுவதால் நோயால் பீடிக்கப்பட்டவர்களின் சடலங்கள் ஆங்காங்கே கிடந்து நாறுகின்றன; நோயாளிகள் நாதியற்றுக்கிடக்கிறார்கள்.

ஒரு வீட்டில் நோய்த் தொற்று ஏற்பட்டதாக பேச்சு அடிபட்டால் போதும். முழுக்கிராமமுமே மூடை, முடிச்சுகளையும் கட்டிக் கொண்டு ஒட்டம் பிடித்தப்ப புறப்பட்டுவிடும்.

### நாதியற்றுக்கிடக்கும் சடலங்கள்

ஸயரில் குடியானவன் ஒருவனின் கொட்டகையில் இந்நோய் தலைகாட்டியது. முதலில் அவனது இரண்டாவது மனைவி தலைசாய்த்தாள். அவளது உடலைப் புதைத்து விட்டுவந்த குடியானவன் அடுத்து 'எபோலா' வைரஸிற்கு இலக்கானான். குடிசையின் நடுவே வைரஸிற்குப் பலியான குடியானவனின் சடலம் கடந்த மூன்று நாட்களாக புதைப்பாரற்று நாறுகிறது. அருகில் இந்நோயினால் பீடிக்கப்பட்டு, துவண்டநிலையில் அவனது முதல் மனைவி. அக்கம்பக்கத்தில் எவருமில்லை. எல்லோரும் நோய்க்கு அஞ்சி ஓடிவிட்டனர். குடியானவனின் சடலத்தையோ அல்லது நோயினால் அவஸ்தைப்படும் அவனது முதல் மனைவியையோ கவனிக்க எவரும் தயாரில்லை— இதுதான் கிக்விற் நகரின்நிலை என்கிறார் ஒரு செய்தியாளர்.

### சுகாதாரப் பணியாளர் பெரிதும் பாதிப்பு

"இந்த நகரில் எபோலா வைரஸ் தாக்கத்துக்கு இலக்கானவர்களில் எழுபது சதவீதத்தினர் சுகாதாரப் பணியாளர்களே" — என்றார் அந்நகரத்தின் பேராசிரியர் ஜக்குவஸ் முயாம்பே.

சுகாதார உதவி வழங்கப் போய் தமக்கு உத்திரவம் தேடிக் கொண்டிருக்கிறார்கள் இந்தப் பணியாளர்கள்.

"மக்கள் பயத்தின் காரணமாக, நோயால் பீடிக்கும் அல்லது இறக்கும் தமது உறவினர்களைவீட்டில் அப்படியே விட்டு விட்டு ஒடித் தப்புகின்றனர்"— என்றார் ஸயரில் மருத்துவ சேவையில் ஈடுபட்டிருக்கும் — பிரிட்டனைச் சேர்ந்த — அருட்சகோதரி சோபி பெப்பர்.

அவரது "ஏழைகளின் அருட்சகோதரிகள் இல்லம்" மூலம் மக்களுக்கு சுகாதார சேவை ஆற்றும் பணியில் ஈடுபட்டிருந்த — இத்தாலி நாட்டைச் சேர்ந்த —ஐந்து அருட்சகோதரிகள் இந்த நோய்க்கு அடுத்தடுத்து பலியாகியிருக்கிறார்கள்.

உயிரிழந்த அருட்சகோதரி ஒருவரின் உடலை சவப்பெட்டிக்குள் வைத்து மூடி முகமூடி நீண்ட "கவுண்" கையுறை ஆகியவை அணிந்த சுகாதார சேவையாளர் ஒருவர் சவப் பெட்டியை இழுத்துக் கொண்டு செல்வதைக் காண முடிந்தது.

"ஏழைகளின் அருட்சகோதரிகள் இல்லம் அடுத்தடுத்து ஐந்து அருட்சகோதரிகளை எபோலாவுக்கு பலி கொடுத்த அதிர்ச்சியில் உறைந்து போய் நிற்கிறது. அங்கிருந்து புலம்பல் ஒசை கேட்ட வண்ணம் உள்ளது.

அருகில் இந்த வைரஸினால் உயிரிழந்த ஒருவரின் சடலம் கடந்த சில நாட்களாகக் குடிசை ஒன்றுக்குள் கிடப்பதாகவும்—

அதனை எடுத்துப் புதைப்பதற்கு தாம் ஆட்களைத் தேடிக்கொண்டிருப்பதாகவும் அருட்சகோதரி பெப்பர் குறிப்பிட்டார்.

### மற்றைய நாட்டுக்கும் எபோலா பரவியதா?

இந்த வைரஸ் ஏற்கனவே ஐவரி கோஸ்ட் நாட்டுக்கு பரவி விட்டதாகக் கூறப்படுகின்றது ஆனால் அது இன்னமும் ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை

ஐவரி கோஸ்ட் நாட்டில் சிமபன்ஸியிலிருந்து இந்நோய் இம்முறை பரவ ஆரம்பித்ததாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

இந்த வைரஸ் மத்திய ஆபிரிக்க நாடுகளில் இருந்து மெல்ல, மெல்லப் பரவி முழு உலகையுமே கலக்கிடிக்கப் போகின்றது என சில சுகாதாரத்துறை வட்டாரங்கள் அபாயமணி எழுப்பியிருப்பது உலகைப் பரபரப்பிலும் அச்சத்திலும் ஆழ்த்தியிருக்கிறது.

ஆனால் தீவிரமான—கடுமையான—முறையில் சுகாதார பாதுகாப்புத் தடுப்பு முறைகள் பின்பற்றப்பட்டால் இந்த வைரஸை அடியோடு அடக்கி விடலாம் என உலக சுகாதார ஸ்தாபனமும் அதன் நிபுணர்களும் கூறுகின்றனர்.

ஸயரில் இந்நோய் பரவி வரும் கிக்விற் நகரம் நோய்ப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. அங்கிருந்து எவரும் வெளியேறாமல் இருக்க நகரச் சுற்றி கடுங்காவல் போடப்பட்டு அவசர நிலை நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. சில இடங்களில் ஊரடங்கு உத்தரவும் அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது

1963 ஆம் ஆண்டு பெல்ஜியம் நாட்டிலிருந்து விடுதலை பெற்ற ஸயர் நாடு கடந்த முப்பதாண்டுகளுக்கு மேல்— சர்வாதிகாரி போன்றிருக்கும்—ஜனாதிபதி மொபூட்டு செஸஸ்கோவின் ஆட்சியின் கீழ் இருந்து வருகிறது.

உலகில் மனிதன் அறிந்த சகல கனிம வளங்களையும் கொண்டிருக்கும் ஸயர் ஜனாதிபதி மொபூட்டுவின் ஆட்சியின் கீழ் நலிவுற்று ஏழை நாடாக—கஷ்டப்பட்ட குடியரசாக — திகழ்கின்றது. ஆட்சியின் சீரழிவினால் எங்கும் லஞ்சம்; பஞ்சம்; பட்டினி; சாவு.

ஏற்கனவே ஆட்கொல்லி "எய்ட்ஸ்" நோயின் பாதிப்பால் நலிவுற்றிருக்கும் ஸயரை "எபோலா" நோயின் தாக்கம் பொருளாதார அடிப்படையிலும் மேலும் சீரழித்திருக்கிறது.

சுகாதாரத்துறைஉட்படபல அரச துறை ஊழியர்களுக்கு நீண்டகாலமாக சம்பளம் வழங்கப்படவில்லை இந்நிலையில் "எபோலா" வைரஸாம் ஆட்கொல்லி நோயால் தாக்க, பல சுகாதார சேவைப் பணியாளர்கள் பணிபுரியும் இடத்திலிருந்து "காணாமல்" போய் விட்டனர். இது நிலைமையை மேலும் மோசமாக்கியிருக்கிறது.

இந்த வைரஸ் பரவாமல் தடுப்பதற்கான வழிவகைகளைக் கண்டறியவும், உரிய நடவடிக்கை எடுப்பதற்காகவும் உலக சுகாதார ஸ்தாபதின் நிபுணர்கள் ஸயருக்கும் ஐவரி கோஸ்ட்டுக்கும் விரைந்துள்ளனர். மேலும் பல நாடுகள் தத்தமது நாட்டு வைரஸ் ஆராய்ச்சி நிபுணர்களை ஸயருக்கு அனுப்பியுள்ளன;

கடந்த மார்ச் மாதத்தில் ஸயரில் தலைகாட்டத் தொடங்கிய 'எபோலா' வைரஸ் உடன் கட்டுப்பாட்டுக்குள் வருமா? அல்லது தொடர்ந்து ஆட்கொல்லியாக உலகம் முழுவதும் பரவுமா? — காலம் பதில் சொல்ல வேண்டிய கேள்விகள் இவை.

★

தொகுப்பு: கவி

## ஸயர் தப்புமா? உலகம் பிழைக்குமா?

# மத்திய ஆபிரிக்காவில் இன மோதல்களின் மற்றொரு மையப்பகுதியாக புறூண்டி

மத்திய ஆபிரிக்காவில் உள்ள சின்னஞ்சிறு நாடுகள் புறூண்டியும், றுவாண்டாவும்.

இந்த இரு நாடுகளிலும் பெரும்பான்மை மக்கள் ஹூட்டு (Hutu) இனத்தவர்கள். சிறுபான்மையினர் ருட்சி (Tutsi) இனத்தவர்கள்

இந்த இரு நாடுகளிலும், ஆயுத பலத்திலும், பணப் பலத்திலும் சிறுபான்மையினரான ருட்சி இனத்தவர்களின் ஆதிக்கமே ஓங்கி நிற்கிறது. பெரும்பான்மைஹூட்டுஇனத்தவர்கள் பல துறைகளிலும் நசுக்கப்பட்டு வருகின்றனர்.

றுவாண்டாவில் கடந்த வருடம் நிகழ்ந்த உள்நாட்டு யுத்தத்தின் போது 10 லட்சம் மக்கள் வரை கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானோர் ருட்சி இனமக்கள். தற்போது சிறுபான்மை ருட்சி இனத்தவர்கள் றுவாண்டாவை தமது முழுக் கட்டுப்பாட்டின் கீழும் கொண்டு வந்து விட்டனர்.

தனது இனத்தவர்களைப் படுகொலை செய்த ஹூட்டு இனமக்களை ருட்சி இன ராணுவம் தற்போது தேடிப் பிடித்து பழிவாங்கி வருகிறது-

தென்மேற்கு றுவாண்டாவில் உள்ள கிபேஹோ அகதி முகாமில் சமீபத்தில் 8ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஹூட்டு இன மக்கள் ருட்சி ராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

றுவாண்டாவில் கடந்த வருடம் இடம்பெற்ற — தற்போது தொடர்ந்து இடம் பெற்று வரும் இனப் படுகொலைகள் புறூண்டியிலும் ஏற்படலாம் என்று அஞ்சப்படுகிறது.

றுவாண்டவைப் போன்று புறூண்டியின் சனத்தொகையிலும் 85 சதவீதமானோர் ஹூட்டு இனமக்களே 14சதவீதமானோரே ருட்சி இனத்தவர்கள்.

ஹூட்டு இனத்தவர் ஏழை விவசாயிகள் புறூண்டியிலும் பெரும்பான்மை ஹூட்டு இனத்தவர்கள் ஏழை விவசாயிகள் தான். அவர்கள் கல்வி அறிவு அற்றவர்கள். இதற்கு எதிர்மாறாக ருட்சி இனத்தவர்களின் அனேகமானோர் நிலச் சுவாந்தர்கள். புறூண்டியின் ஆயுதப் படையில் ருட்சி இனத்தவர்களே அதிகமானோர். ஆயுதப் படைகளின் உயர் பதவிகளிலும் அவர்களின் ஆதிக்கமே ஓங்கி நிற்கின்றது

1994 ஏப்ரலில் றுவாண்டாவின் தலைநகரான கிகாலியில் பெரும்பான்மை ஹூட்டு இனத்தவர்களான புறூண்டி, றுவாண்டா ஜனாதிபதிகள் சிறுபான்மை ருட்சி இனத்தவர்களால் கொல்லப்பட்டதை அடுத்து றுவாண்டாவில் உள்ள ருட்சி இனத்தவர்களை முற்றிலும் ஹூட்டு இனத்தவர்களைக் கொண்ட றுவாண்டா ராணுவம் படுகொலை செய்தது.

றுவாண்டாவின் சனத்தொகையில் எட்டில் ஒரு வீதமான சுமார் 10 லட்சம் மக்கள் படுகொலை செய்யப்பட்டு விட்டனர். எஞ்சியோர் அனேகமானோர் அகதிகளாகி விட்டனர். அல்லது காவலில் இருந்து வருகின்றனர் இப்படுகொலைகள் ஹூட்டு இனத்தவர்களிடம் ஆட்சி போகக் கூடாது என்ற எண்ணத்தை புறூண்டியில் உள்ள ருட்சி இனத்தவர்களுக்கு ஏற்படுத்தியது

றுவாண்டாவில் கடந்த ஆண்டு இருந்ததைப் போன்று தற்போது புறூண்டியிலும் ஹூட்டு இனத்தவர்களும் ருட்சி இனத்தவர்களும் ஒருவரை ஒருவர் தீர்த்துக் கட்டும் நடவடிக்கையில் இறங்கி விட்டனர்.

1993 இல் புறூண்டியில் முதலாவது தேர்தல் நடைபெற்ற பின்னர் இடம்பெற்ற இனமோதல்களில் ஆயிரக்கணக்கான ஹூட்டு - ருட்சி இனமக்கள் கொல்லப்பட்டு விட்டனர்.

## றுவாண்டாவின் பாதையிலே பெரும் அழிவை நோக்கிச் செல்கின்றது

புறூண்டியின் (Burundi) தலைநகர் புஜும்புரா (Bujumbura).

1993 இல் புறூண்டியில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது ஹூட்டு இன ஜனாதிபதி பதவி ஏற்க முன்னர் புறூண்டியில் ருட்சி இனத்தவர்களின் ஆதிக்கமே அரசியல் துறையிலும் சரி பொருளாதாரத் துறையிலும் சரி மேலோங்கி நின்றது

1993 தேர்தலின் பின்னர் அங்கு தொடர்ந்து குழப்பங்கள் நிலவி வருகின்றன.

### முதலாவது ஜனாதிபதி கொலை

1993 இல் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது ஹூட்டு இன ஜனாதிபதியான மெல்சொயர் என்டடாயே (Melchior Ndadaye) நான்கு மாதங்கள் மட்டுமே பதவி நீடிக்க முடிந்தது. அதே ஆண்டு ஒக்ரோபர் மாதம் ருட்சி இன ராணுவ அதிகாரிகளினால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இவருக்குப் பின் பதவிக்கு வந்த

– சஞ்சரன் –

ஹூட்டு இன ஜனாதிபதியே 1993 ஏப்ரலில் றுவாண்டா தலைநகர் கிகாலியில் இடம்பெற்ற விமானத் தாக்குதலில் கொல்லப்பட்டவராவார்

இந்த இரண்டு ஜனாதிபதிகளின் கொலைகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் புறூண்டியில் அரசியல் படுகொலைகளும் இன மோதல்களும் சர்வ சாதாரணமாக இடம்பெற்று வந்தன.

தற்போது புறூண்டியில் ஜனாதிபதியாக இருப்பவர் சில்வெஸ்ரர் நிடிபன்துன் நாயா (Sylvestre Ntibantun Gnaya)

புறூண்டியில் கடந்த மார்ச் மாதம் 11ஆம் திகதி இடம் பெற்ற சம்பவம் ஒன்றே [illegible] மோசமடை[illegible] அமைந்தது.

ஹூட்டு இனத்தவரான அரசாங்க அமைச்சர் ஒருவர் தலைநகர் புஜும்புராவில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் நடந்து ஒரு வாரத்துக்குப் பின்னர் கடமை முடிந்து திரும்பிக் கொண்டிருந்த ராணுவ அணி ஒன்று ஹூட்டு இன கெரில்லாக்களின் திடீர்த் தாக்குதலுக்கு உள்ளானது. இச்சம்பவத்தில் பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவரும் அவரது நான்கு வயதுக் குழந்தையும் கொல்லப்பட்டனர்.

கடந்த மார்ச் 24ஆம் திகதி ஹூட்டு இனத்தவர்களும் ருட்சி இனத்தவர்களும் கலந்து வாழும் இரு நகரங்களில் இடம் பெற்ற இன மோதல்களில் 160க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

1994 இல் றுவாண்டாவில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் பின்னர் ருட்சி தேசபக்தர்கள் முன்னணிக்கு அஞ்சி 20 லட்சம் ஹூட்டு இன மக்கள் புறூண்டி, ஸயர், உட்பட அயல் நாடுகளில் தஞ்சம் அடைந்தனர். றுவாண்டாவிலிருந்து வந்து புறூண்டியில் தஞ்சம் அடைந்தோர் சுமார் இரண்டு லட்சத்துக்கும் மேற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

றுவாண்டாவில் இன மோதல்களால் முழு நாட்டின் சனத்தொகையில் எட்டில் ஒரு பங்கினர் அழிந்து விட்டனர். புறூண்டியும் இதே ஆபத்தையே எதிர் நோக்கி உள்ளது.

## ஹூட்டு - ருட்சி இன மக்கள் நீண்ட கால பகைவர்கள்

தன்ஸானியா, ஸயர், றுவாண்டா, தங்கனிக்கா ஏரி ஆகியவையே புறூண்டியின் எல்லைகள்;

புறூண்டி மக்களின் மொழி கிறுண்டி (Kirundi) ஆனால் பிரெஞ்சு மொழியே உத்தியோக மொழி.

புறூண்டியில் 50 சதவீதமானோர் கிறிஸ்தவர்கள்.

புறூண்டியின் பூர்வீக மக்கள் வேட்டையாடுவதைத் தொழிலாகக் கொண்ட பிக்மி (Pygmy) இனத்தவர்கள். இதன் பின்னர் மேற்குப் புறத்தில் இருந்து ஹூட்டு இனத்தவர்களும் அதன் பின்னர் வடக்குப் புறத்திலிருந்து ருட்சி இனத்தவர்களும் வந்து குடியேறினார்கள்

1962 ஆம் ஆண்டு புறூண்டி சுதந்திரம் பெற்றது. சுதந்திரம் பெற்றபின் சிறுபான்மை இனத்தவரான ருட்சி இனத்தைச் சேர்ந்தவரே மன்னர் ஆவார்.

1965 ஆம் ஆண்டில் ருட்சி இனத்தவர்களின் ஆதிக்கத்துக்கு எதிராக ஹூட்டு இனத்தவர்கள் கிளர்ச்சி செய்தனர்.

படிப்படியாக இருஇனமக்கள் மத்தியிலும் உருவான எதிர்ப்புணர்ச்சி 1972 இல்பெரும் வன்முறைகளிலும் இரத்தக் களரியிலும் முடிவடைந்தது.

இரு இனத்தவர்களிலும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் அப்போது கொல்லப்பட்டனர்.

1993 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் மூலம் பெரும்பான்மை ஹூட்டு இனத்தவர்களிடம் ஆட்சி ஒப்படைக்கப்படும் வரை ருட்சி இனத்தவர்களே அதிகாரங்களை வகித்து வந்தனர்

புறூண்டியின் சனத்தொகை 62 லட்சம் ஆகும்.

# பேச்சுவார்த்தைகளை அரசு கற்றுக்குட்டித்தனமாக நடத்தியது

## அரசியல் விமர்சகர் கருத்து

*தென்னிலங்கை அரசியல் விமர்சகர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியான 'தசண்டே லீடர்' ஆங்கில வார இதழில் எழுதிய அரசியல் விமாசனக் கட்டுரையில் அரசு – புலிகள் பேச்சுவார்த்தை குறித்து வெளியிட்ட சில கருத்துக்கள் இங்கு பிரசுரமாகின்றன.*

இராணுவப் பலத்தைப் பாவிப்பதற்கு அல்லது பேச்சுவார்த்தைகளைப் பயன்படுத்துவதற்கு அரசியல் நோக்கம் ஒன்று இருக்க வேண்டும்.

இந்த இரண்டில் ஒன்று அது எதுவானாலும் அதைக் கடைப்பிடிப்பதற்கான [illegible] தீர்[illegible] இருக்க வேண்டும்.

### சமாதானம் பற்றி அரசு புரிந்துகொண்டது என்ன?

இந்தக் கஷ்டகாலத்தில் அரசாங்கம் சமாதான நடைமுறையில் ஈடுபாட்டைக் கொண்டிருப்பது பாராட்டுக்கு உரியதுதான்; ஆனால் சமாதானம் என்பதை அது எவ்வாறு புரிந்து கொள்கிறது. சமாதானத்திலிருந்து அது எதனைப் பெறவிரும்புகிறது சமாதானத்துக்காக அது எதனைக் கொடுக்கும் என்பதை வெளிப்படுத்தாவிடின் அது அரசியல் ரீதியில் வெற்றுப் பேச்சாகவும் நாசம் விளைப்பதாகவும் அமையும்.

இராணுவ நிகழ்வு நிலை ஒன்றை ஏற்படுத்தவோ, பூரண வெற்றியைப்பெறவோ போரிட்டு பின்னர் ஒரு தீர்வைத்திணிப்பது உயிர்களையும் வளங்களையும் விரயப்படுத்தும் வேலை ஆகும் ஆகவே அது அசிங்கமானதும் ஆகும். மோதலைத் தீர்ப்பதில் அதன் பங்கை வைத்துத்தான் இராணுவ நடவடிக்கையைக் கணிக்க வேண்டும். ஆகவே இராணுவ நடவடிக்கையை அரசியல் வெற்றிடத்தில் நடத்தக் கூடாது; பொதுவான அரசியல் நோக்கத்தை திசைதிருப்பிவிடும் முறையிலும் நடத்தக்கூடாது.

### போருக்கு நோக்கம் வேண்டும்

போரிடுவதற்கு தக்க அடிப்படையும் உன்னத நோக்கமும் இருக்க வேண்டும். ஒர் அரசாங்கம் மக்களுக்காகப் போரிட வேண்டும்.

ஸ்ரீலங்காவில் அரசாங்கம் நியாயமான நின்று பிடிக்கக் கூடிய தீர்வு ஒன்றை ஸ்தாபித்து இன மோதலைத் தீர்க்கப் போரிட வேண்டும் என இதனை அர்த்தம் கொள்ளலாம்.

முதலில் போரிட்டு விட்டு, இனமோதலைத் தீர்ப்பது எப்படி என்று பின்னர் தீர்மானிக்கலாம் எனக் கருதுவதும்—

போரிடுவது மட்டும் போதும் என்று நம்புவதும்— எம்முடைய கஷ்டங்களை மேலும் சிக்கலாக்கவே துணை புரியும்.

அரசாங்கம் உண்மையில் என்னயோசிக்கின்றது? யாருக்காவது தெரியுமா? அரசாங்கத்துக்குத்தானும் அது தெரியுமா?

அரசாங்கத்துக்குத் பொழுது ஒரு கொள்கை கிடையாது என்ற கணிப்பையே எவரும் கொண்டிருப்பார்கள்.

### புரிந்து கொண்டதா?

அரசாங்கம் அதன் சமாதான நடைமுறை பற்றி கணிப்பீடு செய்துள்ளதா என்பது முக்கியமானதோர் கேள்வியாகும் கடந்த எட்டு மாதங்களில் விடுதலைப்புலிகளை அரசாங்கம் புரிந்து கொண்டதா என்பது முக்கியமானது மீண்டும் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது என்றால் அவர்களை யதார்த்த ரீதியாகக் கணிப்பிடுவது அவசியமானதாகும்.

பேச்சுவார்த்தைகள் நல்ல நோக்கம் கொண்டவையாக அமைந்தபோதும் கற்றுக்குட்டித்தனமாக நடைபெற்றன. தெளிவான நெறிப்படுத்தல் இன்றி — கஷ்டமானதோர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## சொல்லாக்கம் செய்வோம்

"பல நாடுகளில் தமிழர்கள் வாழ்ந்தாலும் தமிழ் வாழப்போவது தமிழ் நாட்டிலும், எமது மண்ணிலும் தான். எனவே பேச்சு, இலக்கியம், கலைச்சொல் ஆக்கங்களில் பல்கலைக்கழக தமிழ்த் துறையுடன் இணைந்து புதிய சொற்களைக் கண்டுபிடித்து தமிழ் நாட்டுக்கு வழிகாட்ட வேண்டிய பொறுப்பு; எமக்கு உண்டு".

அகில இலங்கைக் கம்பன்கழகத்தின் பதினைந்தாவது ஆண்டு நிறைவு விழாவின் நிறைவு நாள் நிகழ்ச்சிகள் அண்மையில் நல்லூரில் நடைபெற்ற போது அங்கு உரையாற்றிய பேராசிரியரும், ஈழத்தின் பிரபல மூத்த எழுத்தாளர்களில் ஒருவருமான நந்தி மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

தாயகம் இன்றி தாய்மொழி சிதைந்து, அவலப்பட்ட யூதர்கள் தமக்கென ஒரு தாயகம் அமைத்த பின்னர் தமது ஹிப்ரு மொழியை எவ்வாறு விருத்தி செய்து தொழில்நுட்பத்துறை முதல் இராணுவத்துறை வரை அதனை வளமான மொழியாகப் பயன்படுத்துகின்றார்கள் என்பதை இந்த விழாவில் உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக கலைத்துறைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை விளக்கினார்.

"இரண்டாயிரம் ஆண்டு இலக்கிய வளர்ச்சி பெற்றவர்கள் நாம் என்று கூறி பெருமைப்படுகின்றோம். ஆனால் பல்வேறு துறைகளிலும் பயன்படுத்தக் கூடிய கலைச் சொற்கள் எம்மிடம் இருக்கின்றனவா?"— என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

காலம் மாறிக்கொண்டிருக்கிறது. இருபத்தோராம் நூற்றாண்டை நோக்கி நவீன யுகம் முன்னேறிக் கொண்டிருக்கிறது.

அந்த யுகத்தில் — ஏனைய சர்வதேச நாடுகளுடன், சமூகங்களுடன் ஈடுகொடுக்கக் கூடியதாக நாமும் முன்னேறிக் கொண்டிருக்கின்றோமா என்பது தான் இன்றுள்ள கேள்வி.

பழம் பெருமை பேசுவது நல்லது தான். ஆனால் அது மட்டும் போதுமானதல்ல.

எமது மொழியின் பழம் சிறப்பு, இலக்கிய நயம் ஒருபுறம் பேசப்பட, மறுபுறத்தில் புதிய சவால்களைச் சந்திக்கக் கூடியதாக மொழியை வளம் படுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

"புத்தம் புதிய கலைகள் — பஞ்ச பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்: மெத்த வளருது மேற்கே; அந்த மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை. சொல்லவும் கூடுவதில்லை; அவை சொல்லும் திறமை தமிழ்மொழிக்கு இல்லை" — என்ற வசைச் சொல்லுக்கு நாம் ஆளாகலாமோ எனப் பாரதியார் அன்று கேட்டது இன்றும் எமக்குப் பொருந்தும்.

நவீன உலகிலே முதலாவது தமிழ் அரசை அமைக்கப் போகின்றவர்கள் ஈழத்தவர்கள். நவீன போக்கிற்கு ஏற்ப எமதுமொழியை வளம்படுத்தி நெறிப்படுத்த வேண்டிய பெரும் கடமை எம்மையே சார்ந்தது என்பதனை நாம் மறந்து விடக் கூடாது.

மொழி சிறப்புப்பெற தேவைக்கு ஏற்ப அவ்வப்போது புதுப்புது சொல்லாக்கங்கள் தேவைப்படுகின்றன. அவற்றை வெறுமனே அந்தரத்திலிருந்து நாம் உற்பத்தியாக்கி விட முடியாது.

ஒவ்வொரு துறைக்கும் அந்தந்த துறை சார்ந்த நிபுணர்களுடன் தமிழறிஞர்கள் இணைந்து அந்தந்தத் துறைக்குரிய சொல்லாக்கங்களை மேற்கொள்ள வேண்டும்.

இதற்கு திட்டவட்டமான — அமைப்பு ரீதியான — ஏற்பாடுகள் அவசியம். நன்கு வகுக்கப்பட்ட நீண்ட காலத் திட்டம் ஒன்று தேவை. சொல்லாக்கம், புதிய சொற்களை மாணவர், மக்கள் மத்தியில் பரப்புதல் ஆகிய பணிகளை முன்னெடுத்துச் செல்லக்கூடிய செயலாக்கம் நிறைந்த தனி நிறுவனம் ஒன்று பரந்தளவிலான கட்டமைப்புடன் உருவாக்கப்பட வேண்டும்.

# கிழக்கில் விடுதலைப்புலிகள் நிலைகொள்ளாது தடுக்க தமிழ்க் கட்சிகளின் உதவி கேட்கிறார் சந்திரிகா

விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போர் நடத்துவது; ஏனைய தமிழ் அமைப்புகளுடன் பேச்சுக்கள் நடத்தி இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் கொண்டு வருவது.

இதுவே சந்திரிகாவின் இப்போதைய நிலைப்பாடாம். இதனை அவர் பகிரங்கமாகத் தெரிவிக்கா விட்டாலும், விடுதலைப் புலிகளுடன் நான்காம் கட்டப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு வந்த அரசாங்கத் தரப்புப் பிரதிநிதிகளில் ஒருவரிடம் கூறியதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஜனாதிபதி தாம் அவ்வாறு சொன்னதையே இப்போது செயற்படுத்தி வருகிறார். தமது முடிவுக்கு இணங்க கொழும்பில் உள்ள தமிழ் அமைப்புகளுடன் கடந்த புதன்கிழமை முதலாவது சுற்றுப் பேச்சுக்களை நடத்தினார்.

தமிழர் அமைப்புகளின் தலைவர்களுடன் தானே நேரில் பேச்சுவார்த்தை நடத்தும் ஜனாதிபதி, வடபகுதிக்குச் சென்று விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனுடன் பேசியிருந்தால் சமாதானப் பேச்சுக்கள் தோல்வி அடைந்து மீண்டும் போர் வெடித்திருக்காதே என்று அரசாங்க எம். பிக்கள் சிலர் ஆதங்கப்படத் தொடங்கியுள்ளனர். அவர்களில் ஒருவர் தான் பீலிக்ஸ் பெரேரா என்ற நாடாளுமன்ற உறுப்பினர்.

**போரா? சமாதானமா?**

விடுதலைப் புலிகளை நம்பி அரசாங்கம் பேச்சுவார்த்தைக்குப் போனது. ஆனால் அவர்கள் பேச்சுக்களை முறித்துக் கொண்டு போரை தொடங்கியுள்ளனர். அவர்களைக் களத்தில் சந்தித்து தக்க பதில் கொடுக்க வேண்டும்

## மத்தியஸ்த கோரிக்கையை மேற்கு நாடுகள் நிராகரிப்பு

என்று கூறும் எம். பிக்களும் அரசாங்கத்தில் இல்லாமல் இல்லை. அவர்களில் ஒருவர் தான் போர்க்களத்துக்குச் சென்று பொருதுவதற்குத் தயாராக இருப்பதாகக் கூறிய பிரதி அமைச்சர் ரெஜி ரணதுங்கா.

இதே வேளை எந்த வழி மூலமாவது விடுதலைப் புலிகளுடன் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை தொடங்க வேண்டும். "சமாதான வேட்பாளராக" (Peace Candidates) நின்று தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டு, போருக்குத் தயாராவது என்ன நியாயம்? போருக்குத் தயாராகுமாறும் படையில் சேருமாறும் மக்களை நாமும் தூண்டினால் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் எமக்கும் என்ன வித்தியாசம்? எங்களுக்கு வாக்களித்த சிறுபான்மை மக்களுக்கு நாம் செய்யும் கைமாறு அது தானா? — என்ற கருத்துடையவர்களாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணி எம். பிக்கள் பலர் காணப்படுவதாக தகவலறிந்த வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது.

**அடைக்கப்பட்ட வாய்கள்!**

ஒரு விடயத்தில் சார்பாகவும், எதிராகவும் இரண்டு கருத்துக்கள் இருப்பது இயல்பு. அரசாங்கக் கட்சி எம். பிக்களும் அவ்வாறே. ஆனால் இது விடயத்தில் அவர்கள் கருத்துக் கேட்கப்படுவதில்லை. மூன்று மாதங்களாக (பெப்ரவரி 8ஆம் திகதிக்குப் பின்னர்) அரசாங்க நாடாளுமன்றக் குழுக் கூட்டம் கடந்த 12ஆம் திகதியே நடைபெற்றது. அந்தக் கூட்டத்திற்கு ஜனாதிபதியும் வரவில்லை, பிரதமரும் வரவில்லை. கல்வி அமைச்சர் ரிச்சார்ட் பத்திரனா தான் தலைமை வகித்தார்!

இனப்பிரச்சினை விவகாரத்தில் மட்டுமன்றி ஏனைய விவகாரங்களிலும் அரசாங்க எம். பிக்களின் கருத்து அறியப்படுவதில்லை. சந்திரிகா தாம் நினைத்ததையே செய்கிறார். குளிரூட்டப்பட்ட பஜிரோக்கள் மற்றும் பல சலுகைகளை வழங்கி எம். பிக்களின் வாய்களை அடைத்து வைத்திருக்கிறார் சந்திரிகா!

விடுதலைப் புலிகள் தமது பிரதான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு விதித்த காலக்கெடுக்களை லேசாக எடுத்துக் கொண்டு அசட்டை காட்டிய ஜனாதிபதி —

மோதல் தவிர்ப்பிலிருந்து தாம் விலகிக் கொள்வதாக அறிவித்த கையோடு புலிகள் இரண்டு போர்க் கப்பல்களை தகர்த்ததும் — நிலை தடுமாறிப் போயிருந்தார் என்பது தெரிந்ததே.

அந்த வேளையில் சமாதானப் பேச்சுக்களைத் தொடரலாமா, போரை நடத்தும் வல்லமை அரச படைகளுக்கு உண்டா என்று முடிவு செய்ய முடியாத நிலையில் இருந்தார். எனினும் அப்போதிருந்து ஒரு வாரத்தில் இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் நடைபெறவிருந்ததால், பின்னடைவுகளின் மத்தியிலும் சமாதான முயற்சிகள் தொடரும் என்றார்.

**மத்தியஸ்தம் வகிக்க கோரிக்கை**

தமக்கு சமாதானத்தில் நம்பிக்கை உண்டு என்று

## அரசியல் தீர்வு பேசவென அழைத்து நீண்ட நேரம் ராணுவ விடயம் ஆராய்வு

காட்டிக் கொள்வதற்காக, அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்று முறிந்து போன பேச்சுக்கள் தொடருவதற்கு நடுவராக நின்று உதவுமாறு சில நாடுகளிடம் அப்போது கோரிக்கையும் விடுத்திருந்தார் சந்திரிகா!

இரண்டு போர் விமானங்களை ஏவுகணை கொண்டு விடுதலைப் புலிகள் சுட்டு வீழ்த்தி விட்டார்கள் என்ற செய்தியை, பாரிஸில் நின்ற வேளை கேட்டதும், புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை இனி இல்லை; அவர்களுக்குப் போர் மூலமே பதில் சொல்வது என்று முடிவு செய்தார். அந்த முடிவை நிரூபிப்பது தான் இக்கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அவரின் வார்த்தைகள்.

சந்திரிகா பாரிஸில் இருந்து திரும்பியதும், மத்தியஸ்தராக வருமாறு அவர் கேட்ட வெளிநாடுகள் சில அளித்த பதில்கள், சமாதானப் புறாவையும் ஒலிவ் இலையையும் காலால் நெரித்துக் கொன்று விட்டும் நசித்து விட்டும் இராணுவச் சீருடை

## 4 அம்ச அரசியல் - இராணுவ கலப்பு அணுகுமுறை ஜனாதிபதியின் கையில்

அணிந்து கொள்ள அவரை மேலும் தூண்டியது!

**நிராகரிப்பு**

பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க உதவுமாறு அரசாங்கம் விடுத்த கோரிக்கையை அவை நிராகரித்திருந்தன. பேச்சுக்கள் முறிந்து போனதற்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று அரசாங்கம் உரத்த குரலில் கத்தியிருந்தாலும் சம்பந்தப்பட்ட நாடுகள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

பேச்சுவார்த்தை முறிந்து போனதற்கு அல்லது தோல்வி அடைந்ததற்கு அரசாங்கமே முழுக்க முழுக்கக் காரணம் என்று அவை புரிந்து கொண்டன. கொழும்பில் உள்ள அந்த நாடுகளின் தூதரகங்கள் தத்தமது நாட்டு அரசுகளுக்கு அனுப்பிய அறிக்கைகளில் பேச்சுவார்த்தை தோல்வியடைய சந்திரிகாவும் அரசுமே காரணம் என்பதனைத் தெட்டத்தெளிவாக விளக்கியிருந்தனவாம்!

அதனால் சந்திரிகா அரசை நம்பி எவ்வாறு மூன்றாவது தரப்பாக அல்லது மத்தியஸ்தராக இப்பணியில் ஈடுபடுவது? என்று அவை தமக்குள் தாமே கேட்டுக்கொண்டு சந்திரிகா அரசின் கோரிக்கையை நிராகரித்துவிட்டன!

தமிழ் மக்களின் சிறிய சிறிய — அன்றாட — பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத அரசுக்கு மிகச் சிக்கலான இனப்பிரச்சினையைத் தீர்க்கும் வல்லமை இருக்காது என்று! அவை கணக்குப் போட்டே சந்திரிகாவின் மத்தியஸ்தக் கோரிக்கையை நிராகரித்ததாகவும் தெரியவந்துள்ளது. இதனைச் சம்பந்தப்பட்ட நாடுகளின் கொழும்பு ராஜதந்திரிகள் யாழ்ப்பாணத்துப் பிரமுகர் ஒருவருக்கு வெளிப்படையாகக் கூறியுள்ளனர்.

மீண்டும் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த மத்தியஸ்தம் செய்யுமாறு அரசு விடுத்த கோரிக்கையை நிராகரித்த நாடுகளில் நோர்வே, கனடா, சுவீடன் ஆகிய நாடுகளும் அடங்கும்.

**நோர்வே குழுவின் விஜயம் ரத்து**

இன்றைய அரசியல் சூழ்நிலை குறித்து விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்காக யாழ்ப்பாணம் வருவதாக இருந்த நோர்வே நாட்டு அரச பிரதிநிதிகள் குழு தங்கள் விஜயத்தை ரத்துச் செய்ததற்கும், அரசின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதற்கும் சம்பந்தம் இருக்கிறது என்று நம்ப இடமுண்டு.

தாங்கள் இப்போதைக்கு யாழ்ப்பாணம் வரவில்லை என்று நோர்வே நாட்டுப் பிரதிநிதிகள் கடந்த வாரம் விடுதலைப் புலிகளுக்கு உத்தியோக பூர்வமாக அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கான வாய்ப்புக் குன்றியது ஒருபக்கம் இருக்க, அவர்கள் இப்போதுள்ள பலமான நிலையில் தாம் உத்தேசித்துள்ள திட்டத்திற்கு இணங்க மாட்டார்கள் என்பதும் சந்திரிகாவுக்குத் தெரியும். அதனால் அவர்களைப் பலவீனமான நிலைக்குக் கொண்டு வரும் வரைக்கும் — அதற்கேற்ற வகையில் போர் தயாரிப்புகளைச் செய்யும் வரையில் — கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகளுடன் பேசுவதற்கு சந்திரிகா முடிவு செய்திருக்கிறார்.

புலிகளைப் புறக்கணித்தும் தம்மால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்; மக்கள் கொடுத்த சமாதான ஆணையைத் தாம் மறந்து விடவில்லை என்று காட்டுவதற்கான வேடம் இது. இவ்வாறு வேடம் போடுவதால் தமிழ்க் கட்சிகளின் ஆதரவைத் தொடர்ந்து பெற்று அரசாங்கத்தின் பதவிக்காலத்தைத் தக்க வைக்கலாம் என்பது அரசின் இரண்டாவது நோக்கம்.

விடுதலைப் புலிகளுடன் அரசு பேசுகிறதே; அவர்களுடன் பேசி ஒரு தீர்வுக்கு வந்து விட்டால் நாம் விலாசம் இல்லாதவர்களாகிப் போய் விடுவோமோ என்று ஏங்கிக்

**அரசியல்**

கொண்டிருந்த தமிழ்க்கட்சிகளுக்கும் தம்மை நிலைப்படுத்திக் கொள்ள சந்திரிகா ஒரு நல்ல சந்தர்ப்பம் வழங்கியிருக்கிறார்!

கடந்த புதன்கிழமை நடைபெற்ற சந்திரிகா—தமிழ்க் கட்சிகள் சந்திப்பின் போது அரசாங்கத்தின் அரசியல் தீர்வுத் திட்டம் பற்றிப் பேசப்பட்டதாக அரசாங்கத் தரப்பில் பெரிதாகப் பிரசாரம் செய்யப்பட்டது. இச்சந்திப்பு இரண்டு மணி நேரம் மூடிய கதவுகளுக்குப் பின்னால் நடந்தது.

இந்திய சமஷ்டி முறையையும், சுவிஸ் நாட்டின் கன்ரன் அமைப்பு முறையையும் உள்ளடக்கிய கூடுதல் அதிகாரப் பரவல் கொண்டதாக அரசின் உத்தேச தீர்வுத் திட்டம் அமையும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஒரு கையால் அதிகாரத்தை வழங்கி, மறு கையால் அந்த அதிகாரத்தைப் பறிக்கும் நிலை உத்தேச அதிகாரப் பரவல் திட்டத்தில் இருக்காது – என்று ஜனாதிபதி உறுதி அளித்தார் என்றும் அரச தொடர்பு சாதனங்கள் பிரசாரம் செய்தன.

கூடுதலான சுயாட்சி வழங்குவதற்கு ஜனாதிபதி முன்வந்திருப்பதை தமிழ்க் கட்சிகள் வரவேற்பதாகவும் செய்திகள் வெளியிடப்பட்டன.

ஐக்கிய தேசியக் கட்சி கொடுப்பதற்கு முன்வராத ஒரு தீர்வுத் திட்டத்தை வழங்குவதற்கு சந்திரிகா முன்வந்திருப்பதாகக் காட்டும் வகையில் இந்தியத் தொலைத் தொடர்பு சாதனங்கள் செய்திகளை வெளியிட்டது கவனத்துக்கு உரியது.

ஆனால் அரசியல் தீர்வுத் திட்டம் குறித்துப் பேசப்பட்டதைவிட, விடுதலைப் புலிகளைப் பலவீனமாக்குவதற்கு தமிழ்க் கட்சிகளால் எந்த அளவிற்குத் தமக்கு உதவ முடியும் என்பதை அறிவதிலேயே சந்திரிகா அதிக நேரத்தைச் செலவிட்டார் என்று அறிய வந்துள்ளது.

**கிழக்கை தக்க வைக்க உதவி தேவை**

ஐக்கிய தேசியக் கட்சி அரசின் காலத்தில், கிழக்கு, படைகளின் (பூரண) கட்டுப்பாட்டில் இருந்தது. அந்த நிலைமையை மாற்றி கிழக்கிலும் இராணுவ ரீதியாக மேலோங்கும் நிலையை நோக்கி விடுதலைப் புலிகள்

- உதயகாந்தன் -

நகர்ந்து கொண்டிருக்கிறார்கள். இதனைத் தடுக்க வேண்டும் —

கிழக்கில் விடுதலைப் புலிகள் பலமாகி விட்டால் ஐக்கிய தேசியக் கட்சி காலத்தில் உருவாக்கப்பட்ட நிலைமை எமது பதவிக் காலத்தில் இழக்கப்பட்டு விட்டது என்றே தெற்கில் நோக்குவார்கள். அரசாங்கம் தோல்வி கண்டு விட்டதாக விமர்சிக்கப்படும். அந்த நிலையை அனுமதிக்க முடியாது —

எனவே முதலில் கிழக்கில் விடுதலைப் புலிகள் நிலை கொள்ளாமல் தடுப்பதே அரசின் பிரதான பணி. அதற்கு எந்தெந்த வகையில் உங்களால் உதவ முடியுமோ அந்தந்த வகையில் உதவுங்கள். உதவுவீர்களா? — என்று சந்திரிகா தமிழ்க் கட்சிகளிடம் கேட்டார்.

தமிழ்க் கட்சிகளின் பதில் — ஆம். நாம் உங்கள் பக்கமே. என்ன உதவி வேண்டுமானாலும் செய்கிறோம். பயப்படாதீர்கள். உங்கள் கையை பலப்படுத்துவோம் — என்று அமைந்திருக்கும் என்பதனை எவரும் ஊகிக்கலாம்.

இனப்பிரச்சினைக்கான அரசாங்கத்தின் உத்தேச தீர்வுத் திட்டம் இரண்டு வாரங்களில் தமிழ்க் கட்சிகளுக்குச் சமர்ப்பிக்கப்படும் என்று சந்திரிகா கூறியதாக செய்திகள் வெளிவந்தன.

**நான்கு அம்ச வேலைத்திட்டம்**

ஆனால் தமது அரசியல் தீர்வுத் திட்டத்தை இப்போதைக்குப் பகிரங்கப்படுத்துவது ஆபத்தானது என்றே சந்திரிகா தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் தெரிவித்தாராம். தமது திட்டம் வடக்கு — கிழக்கை இணைக்கும் வகையில் அமைந்திருப்பதால் அதனை வெளியிட்டால் சிங்கள மக்கள் எதிர்ப்பார்கள் என்றும் கூறினாராம்.

ஐ. தே. கட்சி காலத்தில் மங்கள முனசிங்கா தலைமையில் இயங்கிய நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் வடக்கு-கிழக்கு இணைப்புக்கு எதிரான சிபார்சுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் உடந்தையாக இருந்ததையும் சந்திரிகா சுட்டிக் காட்டினாராம்.

அரசாங்கத்தின் தீர்வுத் திட்டத்தின் உண்மையான வடிவம் உத்தேச அரசமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்படும் போது பகிரங்கமாக வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு எனவும் சந்திரிகா தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகளிடம் கூறியிருக்கிறார்!

★ கிழக்கில் புலிகள் நிலை கொள்ளாமல் தடுப்பது.

★ வடக்கில் விடுதலைப் புலிகளை வெல்ல முடியாவிடினும், அவர்களின் பலத்தை மட்டுப்படுத்துவதற்கு ஏற்ற விதத்தில் போரை அங்கு தீவிரப்படுத்துவது.

★ இந்த இரண்டு 'இராணுவத் தீர்வுகளின்' பின்னர் அரசின் உத்தேச அரசியல் தீர்வுத் திட்டத்தை ஏதாவது ஒரு வெளிநாட்டைக் கொண்டு விடுதலைப் புலிகளுக்கு அறியப்படுத்துவது. அதனை ஏற்றுக் கொள்ளக் கேட்பது.

அந்தத் தீர்வை விடுதலைப் புலிகள் ஏற்கவில்லையானால்—

★ ஸ்ரீலங்கா அரசு சில நாடுகளிடம் இப்போது இராணுவ உதவி கேட்டிருக்கிறதல்லவா? அந்த நாடுகளுக்கும் அரசின் உத்தேச தீர்வுத் திட்டத்தைக் கொடுத்து; "இதனைப் புலிகள் ஏற்கவில்லை; அவர்களை நசுக்க மேலும் உதவுங்கள்" என்று கேட்பது

இத்தகைய நான்கு அம்சத் திட்டம் ஒன்றை சந்திரிகா வகுத்துள்ளதாகவும், அதன் பிரகாரமே செயற்பட உத்தேசித்துள்ளதாகவும் விடயமறிந்த வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

இந்த நான்கு அம்சங்களின், கடந்த புதன்கிழமையன்று நடந்த சந்திப்பின் போது முதலாவது இரண்டு விடயங்களையுமே தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு சந்திரிகா நீண்ட நேரம் விளக்கினார்..

**ஒரே மாதிரியான அணுகு முறை**

சந்திரிகா தமது இந்த நான்கு அம்சத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு அமெரிக்க — ஐரோப்பிய நாடுகள் வட்டகையின் உதவியை நாடியுள்ளார் என்றும் —

அதற்கு மேலதிகமாக இந்தியாவின் ஆதரவைக் கேட்டிருக்கிறார் என்றும் — கொழும்பில் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதே வேளை —

விடுதலைப் புலிகளைப் போரினால் மட்டுமன்றி அரசியல் ரீதியாகவும் பலவீனப்படுத்தும் நோக்கமும் சந்திரிகாவிடம் உண்டாம்.

வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் விடுதலைப் புலிகளுக்கு உதவுவதை நிறுத்துவதற்கு அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகளைக் கொண்டு அழுத்தம் போடுவதும் சந்திரிகாவின் திட்டங்களில் ஒன்றாம்.

முந்திய அரசாங்கமும் எத்தனையோ திட்டங்களை வகுத்துத் தான் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போராடியது.

இனப்பிரச்சினைக்கான ஐ. தே. க அரசாங்கத்தின் பிரதான திட்டம் அரசியல்— இராணுவ கலப்பு (Politico—Miltary) அணுகு முறையாகவே இருந்தது.

ஐந்து வருடங்களுக்கு மேலாக அந்த அணுகு முறை பல்வேறு வடிவங்களில் செயற்படுத்தப்பட்ட போதிலும் வெற்றி அளிக்கவில்லை.

அதே திட்டத்தையே சந்திரிகாவும் மேற்கொள்ள முடிவு செய்திருக்கிறார்.

அரசியல் விஞ்ஞானம் பயின்றவர்; அது படித்தவர்! இது படித்தவர்; வன்செயல்களை வெறுப்பவர்; என்றெல்லாம் பட்டம் வாங்கிய சந்திரிகாவுக்கும்—

பட்டமே வாங்காத பிரேமதாசா, விஜேதுங்காவுக்கும் எவ்வித வித்தியாசத்தையும் காண முடியவில்லையே!

அவர்கள் விழுந்த பாழ் கிணற்றுக்குள் தாமும் விழுவதற்கு கொடுக்குக்கட்டி நிற்கும் சந்திரிகா பரிதாபத்துக்குரியவர்!

★

# பர்மிய எதிர்க்கட்சி தலைவிக்கு விருது

கடந்த 6 வருடங்களாக வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள மியான்மார்(பர்மா) ஜனநாயக ஆதரவு தலைவி சூகிக்கு 1993 ஆம் ஆண்டுக்கான ஜவஹர்லால் நேரு விருது வழங்கப்படவுள்ளது.

விடுதலைக்காகவும், ஜனநாயகத்துக்கும் வன்முறையின்றி தைரியமாக போராடியதற்காக இவருக்கு இவ் விருது வழங்கப்படுகிறது.

சர்வதேச நல்லெண்ணம் மற்றும் நட்புறவுஎன்பவற்றை உலக மக்களிடையே வளர்ப்பதற்கு சிறப்புற செயலாற்றிய தலைவர்கள் இந்த விருதுக்கென ஆண்டுதோறும் தெரிவு செய்யப்படுவர்.

உலகம் முழுதும் இருந்து கிடைத்த எண்ணற்ற பரிந்துரைகளில் இருந்து, இந்திய துணை ஜனாதிபதி கே. ஆர். நாராயணன் தலைமையிலான 7 பேர்கொண்ட குழு சூகியை விருதுக்குரியவராக தேர்ந்தெடுத்தது. (இ-5)

## 'சரயு' மலர் நாளை வெளியீடு

தேசியக்கல்வி நிறுவக—யாழ். இந்துக் கல்லூரி, பட்டப்பின் கல்வி டிப்ளோமா மாணவர் ஒன்றியத்தின் 'சரயு' மலர் வெளியீட்டு விழா நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

ஒன்றியத் தலைவர் பொ. ரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கல்வி மேம்பாட்டு பேரவை செயலாளர் திரு. நாக. சண்முகநாதபிள்ளை, யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி சபா.ஜெயராஜா ஆகியோரும் பிரதமவிருந்தினராக வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் திரு இ. சிவானந்தனும் கலந்து கொள்வர்.

# சைவத்தின் ஆணிவேராக சைவ சித்தாந்தம் உளது

## நல்லை ஆதீன முதல்வர் உரை

சாவகச்சேரி, மே 21

"சைவ சித்தாந்தம் சைவத்தின் ஆணிவேராக இருக்கின்றது. எனவே சைவசித்தாந்தத்தை வாழச் செய்து எமது இனிய தமிழ் மொழியை நீண்டு நிலைக்கச் செய்ய வேண்டும்."

சாவகச்சேரியில் கடந்த 18 ஆம் திகதி நடைபெற்ற சைவ சித்தாந்த எழில் ஞானப் பெருவிழாவில் கலந்து கொண்டு ஆசியுரை நிகழ்த்திய நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள் இவ்வாறு தெரிவித்தார்.

அதிபர் அ. பொ. செல்லையா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் முன்னதாக சைவ சித்தாந்தத் திருமுறைகள் சாவகச்சேரி வாரிவனநாத சிவன் ஆலயத்திலிருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன.

நல்லை ஆதீன முதல்வர் தமது ஆசியுரையில் மேலும் கூறியதாவது:

எம்மை சூழ்ந்து நிற்கும் துன்பங்களில் இருந்து விடுபட சமய தத்துவங்கள் நிறைந்த இவ்வாறான நூல்களை, படிக்க வேண்டும் இவற்றின் மூலம் அறிவினை வளர்க்கக் கூடியதாக இருக்கின்றது.

ஆலயங்கள் ஆடம்பரத்திற்காக உருவாகவில்லை மாறாக ஆலயங்கள் சமய உணர்வுகளை ஊட்டவும் நல்வாழ்வு வாழவும் எம்மிடையே நிறைந்துள்ளன என்றார்.

ஆத்மஜோதி நா. முத்தையா, யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீட தமிழ்ப் பண்ணிசைத் துறையைச் சேர்ந்த திரு வி. பி. நவரத்தினம், ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள்.

(க-31-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டு நிகழ்வுகள்

எஸ். ஏ. என். ஸ்தாபனத்தின் ஆதரவில் நவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் அமரர் சந்தியா செபஸ்தியாம்பிள்ளை ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்காக நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று ஞாயிறு பிற்பகல் 3. 30 மணி முதல் நாவாந்துறை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும்.

இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கலஸ் வி. கழகத்தை எதிர்த்து ஊரெழு றோயல் வி. க. அணி மோதும்.

இன்றைய ஆட்டத்தில் பிரதம விருந்தினராக வண. பிதா எப். எக்ஸ் றேக்னோ அடிகள் கலந்து கொள்வார்.

★ ★ ★

யாழ் மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்தும் மாவட்ட ரீதியான தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிறு இணுவில் சந்தை மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 3. 30 மணி— அரியாலை சரஸ்வதி வி. க. எதிர் உடுவில் ஐக்கிய வி. க. [பெண்களுக்கானது.]

★ பிற்பகல் 4. 30 மணி— உடுவில் ஐக்கிய வி. க. எதிர் பயிலி-டி இளங்கோ வி. க. [ஆண்களுக்கானது].

★ ★ ★

அரியாலை சனசமூக நிலையத்தின் 46 ஆவது ஆண்டு விழாவை ஒட்டி நடத்தப்பட்ட 15 வயது பிரிவு அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று ஞாயிறு பிற்பகல் 3. 30 மணி முதல் நடைபெறவுள்ளது.

மூன்றாம் இடத்தை தெரிவு செய்வதற்கான ஆட்டத்தில் சென் அன்ரனீஸ் அணியை எதிர்த்து பொற்பதி ஐ. வி. க. அணி மோதும்.

இறுதி ஆட்டத்தில் பாடும்மீன் வ. க. அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய வி. க. மோதும். (ஐ)

★ ★ ★

உடுவில் டொன். பொஸ்கோ விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் சுன்னாகம் றோட்டரக்ற் கழகம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டமும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிறு மாலை 3 மணி முதல் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இறுதி ஆட்டத்தில் நேதேண்வி கழகத்தை எதிர்த்து உடுவில் சென். பேரிஸ் வி. க. அணியும்— யாழ். றோட்டறி கழகத்தை எதிர்த்து சுன்னாகம் றோட்டரக்ற்கழகமும் மோதவுள்ளன.

இன்றை நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். றோட்டறிக் கழக தலைவர் றோட்டேரியன் ஈ. சரவணபவன் கலந்துகொள்வார். (ஐ)

★ ★ ★

வண. சகோதரர் ஹில்லறி ஜோசப் ஞாபகார்த்த கேடயத்துக்காக யாழ்ப்பாணம் 'டிலாசால் சபை பிரதர்ஸ்' அமைப்பு நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நேற்று முன்தினம் யாழ் பல்கலைக்கழக ஆடுகளத்தில் ஆரம்பமானது. இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3. 00 மணி;- பல்கலைக்கழக ''ஏ'' அணி எதிர் சென் பற்றிக்ஸ் கல்லூரி

★ 4. 00 மணி:- பற்றிழியன்ஸ் எதிர் பல்கலைக்கழக ''பி'' அணி

★ ★ ★

ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் ஈ எஸ். பேரம்பலம் சக நிறுவனத்தின் ஆதரவில் ஜொலிஸ்ரார் கிண்ணத்துக்காக நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் கடைசி இரண்டு கால் இறுதியாட்டங்களும் இன்று யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன. பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ காலை 8 30 மணி:- சென்றலைட்ஸ் சொகஸ் அணி எதிர் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழக அணி

★ பிற்பகல் 1. 30 மணி:- சென்றலைட்ஸ் நீல அணி எதிர் ஒல்ட் கோல்ட்ஸ் அணி.

★ ★ ★

வலி வடக்கு உதைபந்தாட்டச் சங்கம் இணைந்த கழகங்களுக்கு இடையில் நடந்து வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3 00 மணி:- ஈச்சமோட்டை எதிர் அண்ணா ஸ்ரார்.

★ 4 00 மணி:- சென். பேரிஸ் எதிர் ஸ்ரீவாகீஸ்வரி

★ 5 00 மணி:- சென்லூட்ஸ் எதிர் எவரெஸ்ட் (உ)

### இன்று

தொல்புரம் கிழக்கு விக்னேஸ்வரா சனசமூக நிலைய சிறுவர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 30 மணிக்கு தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். (ஒ 28-14)

# போட்டி காங்கிரஸ் கட்சி தலைவராக திவாரி தெரிவு

புதுடில்லி மே 21

நேற்று முன்தினம் நடைபெற்ற காங்கிரஸ் கட்சி அதிருப்தியாளர் மாநாட்டில் போட்டிக் காங்கிரஸ் கட்சியின் தலைவராக திரு. என். டி. திவாரி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் தற்போதைய தலைவரும், இந்தியப் பிரதமருமான திரு. நரசிம்மராவின் தலைமைத்துவத்தை எதிர்க்கும் அர்ஜுன் சிங் தலைமையிலான குழுவினர் இக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

நாள் முழுதும் நடைபெற்ற இம் மாநாட்டில் பல்லாயிரக்கணக்கான காங்கிரஸ் அதிருப்தியாளர்கள் கலந்து கொண்டனர்.

தற்போது தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள திவாரி முன்னர் மத்திய அரசின் நிதி அமைச்சராகவும் வெளிவிவகார அமைச்சராகவும் விளங்கியவர்.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவர். அதிருப்தியாளர்களின் தலைவரான திரு. அர்ஜுன்சிங் காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவராக என். டி. திவாரியின் பெயரை முன் மொழிந்தார்.

அர்ஜுன் சிங் சென்ற டிசம்பரில் பிரதமர் ராவின் அமைச்சரவையில் இருந்து ராஜினாமா செய்திருந்தார்.

அதனை அடுத்து இந்த வருட ஆரம்பத்தில் அவரை கட்சியில் இருந்து பிரதமர் ராவ் வெளியேற்றினார்.

இதேவேளை திவாரியை கட்சியில் இருந்து பிரதமர் ராவ் வெளியேற்றி விட்டதாகவும், 6 ஆண்டு காலத்திற்கு அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து திவாரியை வெளியேற்றி இருப்பதாகவும் இது உடனடியாக அமுழுக்கு வருவதாகவும் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. ஜனார்தன் பூஜாரி அறிவித்துள்ளார்.

திரு திவாரியின், கட்சி விரோத நடவடிக்கைகளுக்காகவே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எது எவ்வாறெனினும் திவாரி கட்சித் தலைவராக தெரிவு செய்யப்பட்டது, பிரதமர் ராவிற்கு பலத்த அவமானம் என்று வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

காங்கிரஸ் கட்சி இதற்கு முன்பும் மறைந்த இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி கட்சித் தலைவராக இருந்த போது இரு தடவைகள் பிளவுபட்டது.

அதன் பின் தற்போதே கட்சி மீண்டும் பிளவுபட்டுள்ளது.

இதற்கிடையில், கட்சியின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள திவாரி, கட்சிச் செயற்பாடுகளை நிதானமாகவும். விவேகமாகவும் தாம் மேற்கொள்ள உள்ளதாகத் தெரிவித்துள்ளார். (இ-5)

## மாதர் சங்க ஆண்டு விழா போட்டிகள்

யாழ்ப்பாணம், மே 21

கொழும்புத்துறை மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஆண்டு விழாவை ஒட்டி பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் கோலம், சமைநாகம்,மாலை கட்டுதல் ஆகிய போட்டிகள் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் நேற்று முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இந்தப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமையும்,நாளை திங்கட்கிழமையும்தொடர்ந்து நடைபெறும். (ஐ-5)

# வடக்கு கிழக்கில் "சமுர்த்தி" திட்டம் உடன் அமுல் செய்யப்படமாட்டாது

## உணவு முத்திரை திட்டமே தொடரும் என அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 21

பொ. ஐ. முன்னணி அரசின் ''சமுர்த்தி'' திட்டம் வடக்கு கிழக்கு மாகாணத்தில் உடனடியாக அமுல் செய்யப்படமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை நடைமுறையில் இருந்து வந்த 'ஜனசவிய' வறுமை நிவாரண உணவு முத்திரைத் திட்டம் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்றும் —

மாணவர் மதிய உணவு முத்திரைத் திட்டமும் தொடர்ந்து நடைமுறைப் படுத்தப்படும் என்றும் கொழும்பில் இருந்து யாழ். செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் சமுர்த்தி திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துவதில் நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை — யாழ். மாவட்ட குடும்பங்களில் வறுமை நிவாரண உணவு முத்திரைகள் 'கோமாரி' கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

இவ்வாண்டு ஏப்ரல் மாதம் முதல் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வரையான முத்திரைகளே எடுத்து வரப்பட்டுள்ளன. (ஐ-7)

### நரோமா பயணிகளுக்கு

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை ''நரோமா'' கப்பலில் இங்கிருந்து பயணம் செய்ய பதிவு செய்த பயணிகளை அன்று காலை 8மணிக்கு பருத்தித்துறை துறைமுகத்தில் சமுகமளிக்குமாறு யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஐ)

### நேர்முக பரீட்சை

வடக்கு கிழக்கு மாகாண சபையால் அண்மையில் நடத்தப்பட்ட கிராம அபிவிருத்தித் திணைக்கள தையல் பயிற்சி போதனாசிரியர் பதவிக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் 47 பேர்களுக்கான நேர்முகப் பரீட்சை நல்லூர் பிரதேச செயலர் அலுவலகத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 00 மணிக்கு நடைபெறும்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கான கடிதங்கள் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன (ஐ

### திருவள்ளுவர் மன்ற கருத்தரங்கு

யாழ்ப்பாணம் மே 21

தமிழீழத் திருவள்ளுவர் மன்றம் மாதந்தோறும் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை நடத்திவரும் கருத்தரங்கு இன்று ஞாயிறு மாலை 4 மணிக்கு உரும்பராய் அன்னை பூபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இன்றைய கருத்தரங்கில் ''குறளைக்கறிக்க குறளும் இறுகச் செறிந்த போராட்டமும்'' என்ற தலைப்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு வே. பாலகுமாரன் உரையாற்றுவார். (ஐ)

### வெதுப்பகத்தில் சுகாதார சீர்கேடு

கல்வியங்காடு,மே 21

சுகாதார சீர்கேடு காரணமாக கல்வியங்காடு பகுதியில் உள்ள வெதுப்பகம் ஒன்று நேற்று சுகாதாரப் பகுதியினரால் மூடப்பட்டது.

சுகாதார விதிகளுக்கு அமைய இயங்காததால் அந்த வெதுப்பகத்தை மூடுமாறு சுகாதாரப் பகுதியினர் பணித்தனர்.

இதேவேளை பல இடங்களில் வெதுப்பகங்களில் சுகாதாரப் பகுதியினர் திடீர் சோதனை நடத்தி வருகின்றனர் (ஐ-77)

### வணிகர் கழக இணையம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 21

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் பொருள்களைக் கொண்டுவரும் பதிவு செய்யப்பட்டவர்கள் இன்று ஞாயிறு பிற்பகல் 3 00 மணிக்கு இணையப் பணிமனையில் தொடர்பு கொள்ளுமாறு யாழ் மாவட்ட வணிகர் கழகங்களின் இணையம் கோரியுள்ளது. (இ)

### வித்துடல் விதைப்பு

யாழ்ப்பாணம் மே 21

கடந்த வெள்ளியன்று ஆனையிறவு பகுதியில் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவடைந்த வீரவேங்கை தாமுவின் (செபஸ்தியாம்பிள்ளை நியூட்டன் — பொலிகண்டி) வித்துடல் இன்று விதைக்கப்படும்,

வித்துடல் இன்று பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்துச் செல்லப்பட்டு பொலிகண்டி சாந்தன் அறிவகத்தில மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும். பின்னர் அங்கு அஞ்சலிக் கூட்டம் நடைபெறும். தொடர்ந்து வித்துடல் வல்வெட்டித்துறை ஊடாக வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு புனித விதை குழியில் விதைக்கப்படும் (ஐ)

### மஹரகம..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிரிக்கு 3 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையை விதித்த கொழும்பு உயர் நீதிமன்ற நீதியாசர் எஸ். என். டி. ஜயசூரியா, இறந்தவர்களின், காயமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு நட்டஈடாக ஒன்றரை லட்சம் ரூபா வழங்குமாறு உத்தரவு பிறப்பித்தார்.

இவ்வழக்கில் இரண்டாம் எதிரியான சுந்தப்பொடி சபாரத்தினத்திற்கு 5 ஆண்டு கடூழியச் சிறைத்தண்டனையும் மூன்றாம் எதிரியான கணபதிப்பிள்ளை அழகதுரைக்கு ஒத்திவைக்கப்பட்ட 10 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. (இ-10)

### எமது ஆணைக்குழு..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கிறது.

எனினும், எமது நீதிநிர்வாகத் துறை மேலும் விரிவாக்கம் செய்யப்பட்டு. இன்னும் திறமையாகச் செயற்பட வேண்டும் என்பதே எனது ஆவல். நீதித்துறையில சேவை ரியும் எமது போராளிகள் உணர்வுகளுக்கும். உறவுகளுக்கும் அடிமை படாது சமூக நீதிக்கு முதன்மை கொடுத்துச் செயற்பட்டால் எமது நீதித்துறை மேலும் உன்னதமடையும்.

எமது சமூகத்தில் பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகள் தொடர்கிறது. அநீதிகள் இருந்துவருகிறது ஆணாதிக்க கொடுமைகள் தொடர்கிறது. இந்த சமூக அநீதிகளிலிருந்து பெண்களுக்கு பாதுகாப்பளிக்கும் வகையில் சட்டங்கள் உருவாக்கப்படவேண்டும்.''

இவ்வாறு தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டார்.

தமிழீழ சட்டக் கல்லூரியின் காலாண்டு வெளியீடான ''சட்டத்தின் திறவுகோல்'' என்ற இதழ் இவ்வைபவத்தின் போது வெளியிடப்பட்டது

தமிழீழ நீதி நிர்வாகத் துறைப் பொறுப்பாளர் திரு. பரா அவர்கள் முதல்பிரதியை தலைவரிடம் கையளித்து. இதழை வெளியிட்டுவைத்தார்

இவ்வைபவத்தில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு தமிழ்ச்செல்வன், நிதித் துறைப் பொறுப்பாளர் திரு தமிழேந்தி ஆகியோரும் கலந்துகொண்டனர். [இ]

### கொழும்பு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி.)

முகத்திற்குள் கொண்டு வரப்பட முன்பே அவற்றை பரிசோதிப்பது. சோதனையிடுவது போன்றவற்றை மேற்கொள்வதற்கு ஏற்றதான வழிமுறைகளை கண்டறிவது தொடர்பாக அக்கறை காட்டியுள்ளனர்.

தூத்துக்குடி மற்றும் கிழக்கிந்திய நாடுகளில் இருந்து கொழும்பு துறைமுகத்துக்கு வரும் சிறிய மரக்கலங்களை ஏற்கனவே அரசு தடை செய்துள்ளது.

அவை காலிதுறைமுகத்தில் தமது சரக்குகளை இறக்கப் பணிக்கப்பட்டுள்ளன

வெடிப் பொருள்களை சிறிய மரக்கலங்களில் ஏற்றி தீவிரவாதிகள் துறைமுகத்திற்கு அனுப்பக்கூடும் என்று உயரதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைப்பதற்கு தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளதாக உயர்பீடத்தினர் நம்புகின்றனர்.

இத்தகைய கடும் பாதுகாப்பு நடவடிக்கைகள் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்கும் விஸ்தரிக்கப்படலாம் என கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று ஊகம் வெளியிட்டுள்ளது.

எயார் லங்கா தற்போது ஏற்றுமதிக்கான பொருள்களை கையேற்பதற்கு முன், கடும் சோதனைகளை மேற்கொண்ட பின்பே ஏற்றுக்கொள்கிறது.

கொழும்பு துறைமுகமும், கொழும்பு விமான நிலையமும் இயலுமான அளவு கடும் பாதுகாப்பு நடவடிக்கை உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஒ-5)

# 6 ஈழத் தமிழர்கள் பிலிப்பீன்ஸில் கைது!

சட்ட விரோதமான முறையில் ஆட்களை வெளி நாடுகளுக்கு அனுப்பி வந்ததாகக் கூறப்படும் இலங்கைத் தமிழர்கள் ஆறுபேரை பிலிப்பீன்ஸ் குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் கைது செய்தள்ளனர்.

பிலிப்பீன்ஸில் இருந்து இலங்கையர்களையும், வேறு ஆசிய நாட்டவர்களையும் இவர்கள் அமெரிக்காவுக்கும், கனடாவுக்கும் சட்டவிரோதமான முறையில் அனுப்பி வந்தனர் என்று பிலிப்பீன்ஸ் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

இலங்கையர்கள் தங்கியிருந்த இடங்களில் திடீர் சோதனை நடத்திய போது இவர்கள் ஆறுபேரும் கைது செய்யப்பட்டனர்.

கனடாவுக்கும், இங்கிலாந்துக்கும் ஆட்களை அனுப்புவதற்காக தயாரிக்கப் பட்ட போலி இலங்கை கடவுச் சீட்டுக்கள், விசாக்கள் என்பனவற்றையும் பிலிப்பீன்ஸ் குடிவரவு,குடியகல்வு அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

போலிக் கடவுச் சீட்டு விசா என்பவற்றை பெற்றுக் கொடுப்பதற்கு இவர்கள் கட்டணமாக 16 ஆயிரம் அமெரிக்க டொலர்களைப் பெற்று வந்தனர் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதற்கிடையில்— பிலிப்பீன்ஸுக்குள் ஊடுருவியுள்ளதாகச் சொல்லப்படும் வெளிநாட்டு தீவிரவாதிகளைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகள் அங்கு தற்போது மேற்கொள்ளப் பட்டுள்ளன. [ஐ-6]

### கடற்படைக்கு

# மேலும் மூன்று விசைப்படகுகள்

வடக்கு கிழக்கு கடற் பிரதேசங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள மேலும் மூன்று தாக்குதற் படகுகளை பயன்படுத்தப் போவதாக கடற்படைத் தகவல்கள் தெரிவிப்பதாக ''லங்கா தீப'' பத்திரிகை தெரிவிக்கிறது.

கடந்த காலங்களில் வடக்குக் கிழக்குக் கடற்பிரதேசங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது சேதமடைந்த மூன்று தாக்குதற் படகுகளில் ஒன்று திருகோணமலையிலும் மற்றொன்று கொழும்பிலும் திருத்தப்பட்டு வருகின்றன.

அரச திணைக்களங்கள், நிறுவனங்களுக்குச் சொந்தமான அதிவேகப் படகுகளை கடற்படைக்கு கையளிப்பது தொடர்பாக அண்மையில் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டன எனத் தெரிவிக்கும் அப்பத்திரிகை கடந்த காலங்களில் சுங்கத் திணைக்களத்திற்குச் சொந்தமான நான்கு அதிவேகப்படகுகள் கடற்படைத் தேவைக்கு பெறப்பட்டன எனக் குறிப்பிட்டுள்ளது. (இ-10)

### 2·210 பேருக்கு அனுமதி

சுமார் 2 ஆயிரத்து 210 பயிற்சி ஆசிரியர்களும், சான்று பெறாத ஆசிரியர்களும் பயிற்சிக்கலாசாலைகளில் அனுமதிக்கப்பட உள்ளனர்.

இவர்களில் 75 சதவீதமானவர்கள் பயிற்சி ஆசிரியர்கள் ஆவர்; 25 சதவீதத்தினர் சான்று பெறாத ஆசிரியர்கள்

இவர்களில் 1330 பேர் சிங்கள மொழியிலும் 880 பேர் தமிழ் மொழியிலும் பாடநெறிகளை பின்பற்றுவார்கள். [இ-5]

### வவுனியாவில் உள்ள

# இணைப்பு பல்கலைக்கழக மாணவர் ஆர்ப்பாட்டம்

வவுனியா மே 21

வவுனியாவில் உள்ள வடமாகாண இணைப்பு பல்கலைக்கழக கல்லூரி மாணவர்கள் கடந்த வியாழக்கிழமை ஆர்ப்பாட்டபோராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

அனைத்திலங்கை இணைப்பு பல்கலைக்கழக கல்லூரி மாணவர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நாடு முழுவதிலும் உள்ள இணைப்பு பல்கலைக்கழக மாணவர்கள் விரிவுரைகளை பகிஷ்கரித்து வருகின்றனர்.

தமது இணைப்பு பல்கலைக்கழக கல்விச் சான்றிதழின் எதிர்காலதரம் குறித்து, பல்கலைக்கழக ஆணைக்குழு வர்த்தமானி அறிக்கை ஒன்றை விரைவில் வெளியிட வேண்டும் என்றும்—

தமது தொழில் தகைமையை பிரகடனப் படுத்தி உயர் கல்விக்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். என்றும் மாணவர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

தமது கோரிக்கைக்கு உறுதியான பதில் தெரிவிக்கப் படாது போனால் தாம் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக மாணவர் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

மேற்படிக் கல்லூரிகளில் கற்று வெளியேறிய 350 முதல் தொகுதி மாணவர்கள் இதுவரை தொழில் பெறமுடியாமல் அவதியுறுவதாக மாணவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஒ-14]

### காசிவாசி ஞாபகார்த்த பேருரை

யாழ். இந்துசமயப் பேரவையின் குப்பிழான் காசிவாசி செந்திநாதையர் ஞாபகார்த்தப் பேருரையும் இந்துதர்மம் 8 ஆவது மலர் வெளியீடும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும்.

ஆத்மஜோதி நா. முத்தையா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஞாபகார்த்தப் பேருரையை பண்டிதர் மு. கந்தையாவும் சிறப்புரையை செல்வன் ஏ. அனுசாந்தனும் வெளியீட்டுரையை திருமதி கலைவாணியும் நிகழ்த்துவர்.

முதற் பிரதியை யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம் பெற்றுக் கொள்வார். (ஒ-14)

### வீரச்சாவு

யாழ்ப்பாணம், மே. 21

ஆனையிறவு பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் போராளிகள் இருவர் வீரச்சாவடைந்தனர்.

கப்டன் தாமு (செபஸ்தியாம்பிள்ளை தருமப் பிரகாசம் — யாழ்ப்பாணம்), லெப்டினன்ட் சுரேஸ்குமார்(இராமசாமி தமூர்த்தி — மன்னார்) ஆகிய போராளிகளே வீரச்சாவடைந்தனர். (ஐ-4)

## மரண அறிவித்தல்கள்

### ம. சி. இம்மனுவேல்

(காசாளர் - சேரன் பல்பொறி உதிரிப்பாக விற்பனை நிலையம்)

பெரியவிளானைச் சேர்ந்த ம. சி. இம்மனுவேல் 19-5-95 இல் காலமானார்.

இவர் சாந்திகுமாரி ஜேட்ருட்டின் அன்புக் கணவரும் ஜனா லெஸ்லி(போராளி), நிறஞ்ஜனி டெலிசியா (யா/ கருக்குடும்ப கன்னியர்மட பழைய மாணவி) ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை திங்கட்கிழமை (22-5-95) காலை 9 மணிக்கு பனித அடைக்கலமாதா ஆலயத்தில் நடைபெற்று நல்லடக்கம் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் இடம்பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
மனைவி

117 சப்பல் வீதி,
யாழ்ப்பாணம்

(ல/1248)

### வேலுப்பிள்ளை கோபாலபிள்ளை

[அன்னராசா]

நாரந்தனையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கோபாலபிள்ளை நீர்கொழும்பில் காலமானார். இவர் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை – கண்மணி தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற வைத்தி நகர் – சின்னம்மா தம்பதிகளின் மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், கிருபாநிதி, நிமல்குமார், திருக்குமார், குணநிதி ஆகியோரின் தந்தையாரும், யோகராசா, மகேஸ்வரி, வேலாயுதம், சரோஜினிதேவி ஆகியோரின் மாமனாரும், செர்ணம்மா, காலஞ்சென்ற காசரெத்தினம் மற்றும் றஞ்சிதம்மா, பூமணி, கனகராசா, நடராசா, யோகராசா, பரமேஸ்வரன், நாகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் ஆவார் அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (20 – 5 - 95) நீர்கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உறவினர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சகோதரர்கள்

யாழ்ப்பாணம். [36747]

இது நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 21 - 05 1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org